பதினைப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

விரோதிஹு (1889ஆவணிமீ உஅ ஆரம்பமானது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ | யாழ்ப்பாணம்:— தாதுஹு வைகாசிமீ கஉ ( 1936 மே 14 ) வியாழக்கிழமை | இலக்கம்—க0

## இத்தலி அபிஸீனிய யுத்தத்தில் யாருக்குவெற்றி

"சர்வதேச சங்கத்திற்கா, உலக அபிப்பிராயத்திற்கா? பிரிட்டிஷ் இராஜதந்திரத்திற்கா? கிறிஸ்தவ மதத்திற்கா தோல்வி."

இந்தக் கேள்விக்கு யாரும் உடனே பதில் சொல்லி விடலாம். நமது சட்ட மெம்பர்களும் ஹோம் மெம்பர்களும் மந்திரிகளும் கூடத் தங்கள் வழுக்கை மண்டைகளைச் சொறிந்துகொள்ளாமல் பதில் சொல்லி விடுவார்கள்:—

முஸோலினி என்னதான் மார்தட்டிக் கொண்டு "நான் ஜயித்தேன்" என்று கூவினாலும், அதை நாம் நம்புவதற்குத் தயாராயில்லை. விஷப் புகைதான் ஜயித்தது!

ஆனால் தோற்றது யார்? இந்தக் கேள்விக்கு அவ்வளவு சுலபமாகப் பதில் சொல்ல முடியாது. அதற்கு ஒரு நீளமான ஜாபிதாவே கொடுத்தாகவேண்டும்.

1. முதல் தோல்வி சர்வதேசசங்கத்துக்குத்தான். அந்த ஆஷாடபூதிச் சங்கத்துக்குக் கொஞ்சமாவது மானம், மரியாதை ஏற்கெனவே இருந்திருக்கும் பட்சத்தில், அதுவும் இப்போது போய்விட்டது.

2. அடுத்தபடி தோல்வியடைந்தது உலக அபிப்பிராயம். சமீப காலத்தில் உலகத்தின் அபிப்பிராயம் ஏகமனதாக அபிஸீனியாவுக்கு ஆதரவாயிருந்தது. ஆயினும் பிரயோஜனமில்லை.

[இதைப் பார்த்த பின்னர், இந்தியர்வுக்கு அனுகூலமாக உலக அபிப்பிராயத்தைத் திருப்ப வெளி நாட்டுப் பிரசாரம் செய்யவேண்டுமென்கிறார்களே, அது எவ்வளவு நிஷ்பலமானது என்று நன்குதெரியவருகிறது.]

3 பிரிட்டிஷ் இராச தந்திரத்துக்குத் தோல்வி. இந்த யுத்தம் இப்படி முடிவடைய வேண்டுமெனப் பிரிட்டிஷ் ராச தந்திரிகள் விரும்பவில்லையென்பது நிச்சயம். ஆரம்பத்திலிருந்து அவர்கள் சும்மா இருந்திருந்தாலும் பாதகமில்லை. அபிஸீனியாவுக்காகக் கண்ணீர் அதிகமாகப் பெருக்கிவிட்டார்கள். ஆகவே பிரிட்டனுடைய வாய் அனுதாபத்தில் இனி யாருக்கும் நம்பிக்கை ஏற்படுவது சிரமம்.

4. ஸயன்ஸுக்குத் தோல்வி. ஸயன்ஸ் முன்னேற்றத்தினால் உலகத்தில் மொத்தத்துக்கு நன்மையா, கெடுதலா என்பதைப்பற்றி அபிப்பிராய பேதம் உண்டு. "நன்மைதான்" என்று வாதிப்பவர்களுக்கு இது ஒரு தோல்வி. எவ்வளவுதான் ஸயன்ஸ் நன்மை செய்தாலும் இந்த ஓர் அநியாயத்திற்குப் பரிகாரமாகுமா?

5. கிறிஸ்தவ மதத்திற்குத் தோல்வி. "ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு இன்னொரு கன்னத்தையும் காட்டு" என்று சொன்ன மகா புருஷனுடைய மதத்தைச் சேர்ந்தவர்கள் அதே மதத்தைச்சேர்ந்த இன்னொரு தேசமக்களை எவ்விதக் காரணமுமின்றி வெடி குண்டுகளாலும் விஷப்புகைகளாலும் கொன்று குவித்து அவர்கள் தேசத்தையும் சுவாதீனப் படுத்திக்கொண்டனர்.

6. அபிஸீனிய மக்களுக்கும், அதனுடைய நீமன்னருக்கும் தோல்வி. இந்தத் தோல்வியினால் அவர்கள் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகலாம். ஆனால் அவர்களுடைய கீர்த்திக்கு எவ்வித

(தொடர்ச்சி 2-ம் பக்கம்.)

வெண்பா.

பாராதி பூதமெல்லாம் பார்த்துங்கா லப்பரத்தின்
சீராக நிற்குநீ சிறல்கண்டாய்; — நேராக
நிற்குத்திருவருளில்நெஞ்சேயாநிற்பதல்லால்
கற்குநெறி யாதினிமேற் காண்!

—தாயுமான சுவாமிகள்.

## மாதர் மகாநாட்டுத் தலைமைப் பேருரை.

'மாதரும் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைப்பதிற் கலந்து கொள்ளவேண்டும்.''

விழுப்புரம் தாலுகா முதலாவது மாதர் மகாநாடு இம்மாதம் 8-ந் திகதி கொடுங்கரில்கூடியது. அவ்வமயம் அதன் தலைவர் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் செய்த தலைமைப் பிரசங்கத்தின் சாரம் வருமாறு:—

பெண்களுக்குக் கற்பு எவ்வளவு சிறந்ததோ, முக்கியமோ அவ்வளவு தேச விடுதலையும் சிறந்ததும் முக்கியமுமாகும்.

இக்காரியத்தில் பெண்களாகிய நமக்கு என்ன என்று நாம் அசிரத்தையாக விருப்பதுபெரிய தவறாகும். இரண்டு மாடுகளும் ஒன்றாகச் சேர்ந்து இழுத்தால் தான் வண்டி நேராகப் போகும். எண்ணெயும் திரியும் ஒன்றாக இருந்தால் தான் விளக்கின் ஜோதி உண்டாகும். அது போல ஆண் மக்களுடன் பெண்களும் "சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்ற பாரதியாரின் வீர வாக்குப்படி நாம் சரிசமமாக உழைத்தோமானால் கட்டாயம் நம்மால் இந்நாட்டின் அடிமையை விரட்டியோட்டிச் சுதந்திர தேவியைத் தழுவமுடியும். நம் மனத்தில் சுயராஜ்ய உணர்ச்சியாகிய சூரியன் உதயமாகிவிட்டால் சுதந்திர சூரியன் தானே கீழ்த்திசையில் உதயமாகி விடுவான்.

### அந்நிய ஆடை மோகம் ஒழிக

நம் நாட்டு மக்களுக்குப் பயனற்றதும், நம் வாழ்க்கையில் ஆடம்பரத்தை விளைவிப்பதும், நம் கைப்பொருள்களை ஏராளமாகச் செலவாக்கக் கூடியதுமான பகட்டான அந்நிய ஆடைகள், ஹிம்சைக்கு ஏதுவான பட்டாடைகள் மீதுள்ள ஆசையைக் கொஞ்சம் தியாகம் செய்து விட்டால் உங்களை அந்த ஒரு தியாகமே பல சிறந்த தியாகங்களைச் செய்யத் தூண்டிவிடும். உங்களுக்கு வேண்டிய சகல பொருள்களும் தற்போது நம் தாய்நாட்டிலேயே தயாராகின்றன. அந்தப் பொருள்களைப் பார்த்து வாங்கி உபயோகியுங்கள். இதுதான் நீங்கள் தேசத்திற்குச் செய்யும் தியாகமும் உதவியுமாகும்.

### கிராமத் தொழில் அபிவிருத்தி

ஒரு கிராமத்திற்கு வேண்டிய பொருள்களையும் அவசியமான வரையில் உடைகளையும் அந்தந்தக் கிராமத்திலோ அல்லது அடுத்த கிராமத்திலோ தயார் செய்து கொண்டால் நாம் சகலவிதத்திலும் மேன்மையடைவதற்கு அதுவே வழிகாட்டியாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன் வரையில் நம் தேசத்தின் கைத்தொழில்கள் எவ்விதம் பிரகாசித்துச் சிறந்து விளங்கின என்பதை நாம் இப்போது அறவே மறந்து விட்டோம். கைக்குத்தரிசி, எந்திரத்தில் மாவரைப்பது, கூடை, முறம்,

(தொடர்ச்சி 7-ம் பக்கம்.)

## மஹாத்மா தரிசனம்

[துறவிகளின் பெருமை]

1 மடங்கிய பயிர்களெல்லாம் மழைவர நிமிர்ந்து நீளும்
மருண்டிடும் குழந்தைபெற்ற மாதினைக் கண்டுதேறும்
ஒடுங்கிய தேகம்தக்க உணவினால் உறுதி கொள்ளும்
ஒளிந்திடும் நாகம்நல்ல ஓசையால் வெளிவந் தாடும்
அடங்கியித் தேகத்தன்னில் அவித்தையில் அழுந்தும் ஆன்மா
அன்பின்நல் லுருவமாய அறிஞரைக் கண்டபோது
முடங்கிய மயக்கம் நீங்கி முன்னைய உணர்ச்சி ஓங்க
மொய்ச்சுடர் கொழுந்துபோல முடுகிடும் மேலேயன்றோ?

2 அருமறையும் பலகலையும் உலகுக் கீந்து
அறுசமயப் பலவழியை அடக்கி யாண்டு
உரிமையுடன் பிறநாட்டார் உவந்து போற்ற
ஊழிதொறும் புதிதாகும் உயர்வு தாங்கும்
பெருமைகளைப் பெற்றெடுத்த இந்த நாடு
பெற்றதெனு நாமடைந்த பெரியபேறு
மருளகற்றி அருள்சுரக்கும் ஞானந் தோன்றி
மனத்துறவு பூண்டவர்கள் மகிமை யேயாம்

3 துறந்தவர் மிகுந்த நாட்டைத் தொடர்ந்திடும் துன்பமெல்லாம்
துறந்தவர் குறைந்த நாட்டைத் தொடர்ந்திடும் துன்பமெல்லாம்
அறிந்தவர் மொழிகளாலும் அனுபவ அறிவினாலும்
அறிந்தனம் அதனையிந்தத் தேசமும் மறந்ததந்தோ!

4 வான்முறை மழைபெய்யாது மாநிலம் வளமை குன்றும்
கோன்முறை கோணும்மற்றும் குடிவளம் குறைந்து வாடும்
சாண்வயி றதற்குக்கூடச் சரிவரக் கிடைக்கா தாலும்
'தான்' எனும் அகந்தைநீத்த தவசிகள் குறைந்தநாட்டில்

5 அன்னஅத் துறவுபூண்டோர் அரிதெனப் போனதாலோ
சொன்னவர் துறவி யென்றோர் தூய்மையிற் குறைந்ததாலோ
முன்னைய வளங்கள் குன்றி முதுமறைப் பெருமைவிட்டுக்
குன்னிய வாழ்க்கை வந்து குறைந்ததிப் பாரதநாடு

6 அக்குறை நீங்கவென்றே ஆண்டவன் அனுப்பி வந்தோன்
இக்கணம் இந்த நாட்டின் இருள்மிகும் அடிமைநீங்க
முக்குணம் அவற்றுள் போற்றும் முதற்குண வழியேகாட்டும்
சத்குரு வானகாந்தி சத்திய சீலன்தானே

7 தாங்கண்ட இன்பம் இந்தத் தரணியோர் பெறுமாறெண்ணி
ஆங்கென்றும் ஈங்கென்றோடி அறப்பறை அடிக்குங் காந்தி
திங்கென்று உலகம் சொல்லும் செய்கை ஓர் சிறிதுமில்லார்
தாங்கொண்ட பெருமை எங்கும் நல்லவர் யாருங்கொள்வார்.

—நாமக்கல், வெ. இராமலிங்கம்பிள்ளை

## ஜவஹருக்கு வரவேற்பு

வரவேற்புப்பத்திரம் படித்துக் கொடுக்கத் தீர்மானம்.

மே மாதம் 2-ம் வாரத்தில், ஜவஹர்லால் நேரு பம்பாய்க்கு வரும்போது அவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் படித்து அளிக்கவேண்டுமென பம்பாய் முனிசிப்பல் கவுன்ஸிலர் தீர்மானித்திருக்கின்றனர்.

## இன்பக்கூட்டம் ஏமாந்தது.

சென்ற சனிக்கிழமையன்று இரவு அதிகநேரமானபின், யாழ்ப்பாணக் கடற்கரையில், சில மகளிரும் ஆடவரும் மகிழ்ந்து இருக்கும்போது, யாரோ ஒருவன் வந்து ஊத்த தூஸிற் பாடி அவர்களைக் குழப்பியதாகத் தெரிகிறது. பாடவேண்டாமென்று தடுக்கப்பட்டபோது, அவன் உடனே ஒரு வாளை உருவித் தன்னண்டை யாரேனும் வந்தால் அவர்களைத் தான் வெட்டிப்போடுவதாகப் பயமுறுத்தினும். சிறிது நேரம் சென்றபின், அவன் அவ்விடத்தை விட்டகன்றனும். இன்பக் கொண்டாடச் சென்ற கூட்டத்தவரும் ஏமாந்து திரும்ப நேரிட்டதாம்.

## பாலர் பகுதி

# பிரமசாரி சதமர்க்கடம்

### அரியமருமக்களே!

"பிரமசாரி சதமர்க்கடம்" என்று ஒரு பழமொழி நமது நாட்டிலே வழங்குகின்றதல்லவா? இதன் கருத்து என்னவெனில் ஒரு பிரமசாரி (வாலிபன்) நூறு குரங்குக்குச் சரியென்பதாம். எந்த விஷயத்தில் நூறு குரங்குக்குச் சரியென்று கேட்கிறீர்களா? சொல்லுகிறேன்; சேட்டை புரிதல் செய்வதிற்றான் பிரமசாரி நூறுகுரங்குக்குச் சரியாவான். இதைப்பற்றி ஒருகதை உண்டு; அதனை நீங்களும் அறிந்திருப்பது நல்லது.



ஒரு தோணிக்காரன் தன்னுடைய தோணியில் சனங்களையும் பொருள்களையும் ஏற்றிக்கொண்டு இக்கரையிலிருந்து அக்கரைக்குப் புறப்படப்போகுஞ் சமையத்திலே, ஒரு வாலிபன். "அண்ணே அண்ணே, என்னையும் ஏற்றிக்கொண்டுபோ; நான் அக்கரைக்கு ஆவசியகம் போக வேணும்" என்று சத்தமிட்டுக்கொண்டு ஓடிவந்தான்; அவனைக்கண்ட தோணிக்காரன் "அப்பா, நீயோ பிரமசாரிபோற் காணப்படுகிறாய் பிரமசாரி சதமர்க்கடம் என்று உலகத்திலே சொல்லுவார்கள்; தோணியில் இப்பொழுதே பாரம் அதிகமாய்விட்டது; ஆனதால் உன்னை நான்ஏற்றமாட்டேன்" என்று மறுத்தான் "அண்ணே; உனக்குப்புண்ணியம் கிடைக்கும்; நான் அவசியம் போக வேண்டியிருக்கிறது போகாவிட்டால் பெரும் பிழை வரும்; நான் ஒருசேட்டையுஞ் செய்யமாட்டேன்; இது சத்தியம்; அப்படியல்லவென்று உனக்கு என்மேற் சந்தேகம் இருந்தால், என் கால் கைகளைக் கட்டித் தோணியில் ஏற்றிவிட்டு அக்கரையைச் சேர்ந்தபின் அவிழ்த்துவிடு" என்றான். தோணிக்காரன் அதற்கு உடன்பட்டு அவனுடைய கால்கைகளைக் கட்டிவிட்டுத் தோணியில் அவனையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்

அந்தத் தோணியிலுள்ளவர்களுள் ஒரு குறவன் இரு குரங்குகளுடனும் பாம்புப் பெட்டியோடும் இருந்தான். தோணி நட்டாற்றிற் போகும்போது அந்த வாலிபன் பக்கத்திலே கிடந்த ஒருவிளக்குமாற்றில் ஒருஈர்க்கை இழுத்து எடுத்து, எவரும் காணாதபடி அங்கிருந்த குரங்குகளுள் ஒன்றின் அடிவயிற்றில் அந்த ஈர்க்கினாற் குற்றினான்; குற்றவே குரங்கு துள்ளிப் பாய்ந்து பாம்புப் பெட்டி மேல் விழுந்தது; விழவே பாம்புப்பெட்டி தட்டுண்டு சரிய அதன்மூடி தவறிவிட, பெட்டியுளிருந்த நாகபாம்பு படமெடுத்தபடி தலை நீட்டியது; தோணியிலிருந்த சனங்கள் ஏங்கிப் பயந்து தோணியின் ஒருபக்கத்திற் போய் ஒதுங்குவதற்கிடையில் தோணி கவிழ, எல்லோரும் ஆற்றில் மூழ்கி மாண்டனர். நீந்தத் தெரிந்தவர்கள் மாத்திரம் நீந்தி ஒருவாறு கரையேறினர். கால் கை கட்டுண்ட அந்த வாலிபன் கடலில் மாண்டான்; இப்படிப் பிரமசாரிகள் செய்யும் சேட்டைகள் பல உண்டு; இவைகளாற் பெரும் ஆபத்து நேர்வதும் உண்டு; எனது அருமை மருமக்களே! நீங்களும் பிரமசாரிகளாதலினால், இப்படியான சேட்டைகளை ஒருபோதும் செய்யாமற் புத்தியாய் நடந்துகொள்ளுங்கள்.

அருமை மருமக்காள்; கீழ்குறிக்கப்பட்டிருக்கும் பாட்டின் கருத்தை விளக்கமாக எழுதியனுப்புங்கள்.

"சீராடையற்றிடும் வைரவன்
வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந்
தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன
மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே
வயிற்றினிற் பற்றினனே."

சென்ற வியாழக்கிழமை (7-5-36) பாலர்பகுதியில் வந்த விடுவுக்குச் சரியான விடை:

ஸ்ரீ பார்வதிவித்தியாசாலை.
சிவியாதெரு
நாயன்மார்கட்டு.

என்மேற் பட்சமுள்ள "சுப்புமாமா" அவர்கள் அறிவது யாதெனில், நீங்கள் இந்துசாதனப் பத்திரிகையில் எழுதியிருந்த அறிவைத் தரும் நொடிக்கு நான் சரியானவிடையை அன்பார்ந்த வந்தனத்துடன் தருகிறேன்.

அந்த வள்ளக்காரன் முதல் "ஆட்டுக்குட்டியைக் கொண்டுபோய்க் கட்டிவிட்டு வந்து பின் ஓநாயைக் கொண்டுபோய்க் கட்டிவிட்டு ஆட்டை அவிழ்த்துக்கொண்டு வந்து இக்கரையிற் கட்டிவிட்டு பின் கீரைப்பிடியைக் கொண்டுபோய் வைத்துவிட்டுவந்து ஆட்டுக்குட்டியைக் கொண்டுபோகவேண்டும்."

இப்படிக்கு
தங்கள் வாஞ்சையுள்ள
இல 237. ஆ. முத்துக்குமாரு

சரியான விடை எழுதியனுப்பிய மருமக்களாவார்:

இல: 137 இ. சந்திரசேகரம்
சைவாங்கிலவித்தியாசாலை
தொண்டமனாறு.

" 3 க. நாகரத்தினம், நல்லூர்.

" 58 சோ. கனகசுந்தரம்
வண்ணார்பண்ணை.

" 57 சோ. பாலசுந்தரம்
வண்ணார்பண்ணை.

" 193 இ. சிவகுமாரன்
சைவப்பாடசாலை
தொண்டமானாறு

" 201 பொ. நடுநாயகம்
விக்டோறியாக் கல்லூரி
சுளிபுரம்

உங்கள் சுப்புமாமா.

## இத்தலி அபிஸீனிய யுத்தத்தில் யாருக்கு வெற்றி

1-ம் பக்கத் தொடர்)

களங்கமும் ஏற்படாது. வெடிகுண்டையும் விஷப்புகையையும் எதிர்த்து அவர்கள் கடைசிவரையில் போரிட்டார்கள்; சர்வ தேச சங்கம் தங்களுடைய உதவிக்கு வருமென்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தபோதிலும் அவர்கள் எதிரியிடம் தஞ்சம் புகுந்து விடவில்லை. அபிஸீனிய மன்னரிடமும் அந் நாட்டு ஜனங்களிடமும் நாம் அநுதாபங் காட்டுகிறோம், அவர்களுடைய தீரத்தைப் பாராட்டிப் பெருமை கொள்கிறோம்.

7. கடைசியாக, தர்மத்துக்குத் தோல்வி. அது 'தற்காலிக'த் தோல்வியாயிருக்குமென்று நாம் நம்ப வேண்டும். அந்த நம்பிக்கை யில்லாவிட்டால், யோக்யர்கள் இவ்வுலகத்தில் உயிர் வாழவே விரும்பாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

இந்தக் காலத்தில் நமது கண் முன்னே, தர்மத்தை அதர்மம் வென்றதை இரண்டு தடவை கண்ணால் கண்டோம். இந்தியாவிலே கத்தியின்றி ரத்தமின்றி நடந்த சத்தியப்போர் தோல்வியடைந்தது. இப்போது மறுபடியும் அபிஸீனியாவில், நியாயத்தை அநியாயம் வென்றது; சத்தியத்தை அசத்தியம் வென்றது; வீரத்தை மூர்க்கம் வென்றது

உலகத்தில் அதர்மம் வெற்றியடையும். இந்த விந்தையை ஆதிநாளிலிருந்து மகரிஷிகளும் மகான்களும் பார்த்து, அதன் தத்துவத்தை விளக்கியிருக்கிறார்கள். நமது இதிகாசங்கள் எல்லாம் இந்தத்தத்துவத்தை விளக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.

பஞ்சபாண்டவர்கள் நாடு நகரங்களை விட்டு வன வாசம் செய்ய நேர்ந்தபோது,

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்' எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கைசெய்தான்"

என்று அர்ஜுனன் வாய் மொழியாகக் கவி கூறுகிறார். இத்தகைய நம்பிக்கையினால் தான் இந்தியாவில் நாம் இன்னும் சுயராஜ்யம், சுதந்திரம் என்று பேசிக்கொண்டிருக்கிறோம். இதே நம்பிக்கையினால் தான், அபிஸீனியாவின் நீரோ நம் இன்று "பொறுத்திருப்போம்; காலம் மாறும்" என்று அயல் நாடுகளில் அஞ்ஞாதவாசம் செய்யத் துணிந்திருக்கிறார்.

இதிகாச நாயகர்களின் வாழ்க்கையில் அதர்மம் வெல்வது போல் காணப்பட்டுப் பிறகு தர்மம் வெற்றி பெறுவது சில வருஷங்களுக்குள் நடந்துவிடுகிறது ஆனால் ஒரு தேசத்தின் வாழ்க்கையில் அப்படியன்று பல நூறு வருஷம் வரையில் கூட அதர்மத்தின் வெற்றிக் கொடி பறக்கலாம்' ஆனால் கடைசியாக ஒருநாள் தர்மம் ஜயித்தே தீருமென்பது நிச்சயம்.

— ஆநந்தவிகடன்.

## கண்ணே பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்றோட் (நரியன் குண்டு) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்போது நேத்திரத்திற்குரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேர்க்கப் பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணி வரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை
சொந்தக்காரர்
த இராமலிங்கம்
வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasala
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)

Y 26. 7-5-36 to 30-4-37 (வி)

# வெள்ளையர் ஆட்சிக்குச் சனிதிசை ஆரம்பமா?

## எல்லோரும் விரும்பும் சம அந்தஸ்து.

"வெள்ளையர் உண்மையை உணர்ந்து தமது மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது"

[நீர்கொழும்பு திரு. W. S. சார்லிஸ் பெர்னண்டோ]

(முற்றொடர்)

நமது துணையின்றித் தலை நிமிர்ந்து நிற்கமுடியாது. நமது துணையும் ஒத்துழைப்பு மின்றேல் வெள்ளையரின் நாகரிகம் சிதைந்துவிடும். நாம் குறுக்கிடாவிட்டால் வெள்ளைக்காரர் ஒருவரை யொருவர் கொன்று குவித்து நசித்துவிடுவார்கள் என்ற எண்ணம கறுப்பு மக்களின் மனதில் வேரூன்றுவதற்கு வெள்ளையரே காரணராயிருந்தார்கள். கறுப்புமக்களிடம் எத்தகைக் குறைபாடுகளும் இகழ்ச்சிக்குரிய சின்னங்களும் இருக்கின்றன என்று பரிகாசஞ்செய்து வந்தார்களோ அவையெல்லாந் தம்மிடத்தும் சம்பூரணமாக உள்ளன வென்பதை வெள்ளையர் பகிரங்கப்படுத்திக் கொண்டார்கள். இவற்றையெல்லாம் தெரிந்துகொண்ட இந்தியனும் எகிப்தியனும் ஆபிரிக்கனும் எமது நாடுகள் எமக்கே சொந்தமானவை. ஆதலால் எமது நாட்டில் வந்து நுழைந்து எங்களை ஆள்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை உண்டு? எங்களிடத்திலுள்ள வேற்றுமையும் பொறாமையும் உங்களிடத்தில்லையா என்று துணிந்து கேட்கத் தலைப்பட்டுவிட்டார்கள். ஒவ்வொரு தேசத்திலுமுள்ள கறுப்பு நிறத்தவர்களிடம் பெரிய இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன. அது அஹிம்சைக் கொள்கையைத் தழுவியதாயினுஞ்சரி, இரகசியமான சூழ்ச்சிகளேயாயினுஞ் சரி அவைகளின் நோக்கம் ஒன்றேயாகும். நாங்கள் எங்களுடைய அடிமைத்தனத்தை நீக்கிக்கொள்ள வேண்டும். எங்களை ஆளுஞ் சாதியாரோடு சம அந்தஸ்திலே வீற்றிருக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகளைப் போல நமது தேசங்களும் செல்வத்திலும் செல்வாக்கிலும் வல்லமையிலும் சிறப்பிலும் உயர்நிலை எய்தி விளங்கவேண்டும் என்ற பேராவலினால் கறுப்பு நிறத்தோர் தூண்டப்பட்டு வருகிறார்கள். இவர்கள் லட்சியம் மிக உயர்ந்தது. தூய்மையானது. மனிதத்தன்மை வாய்ந்தவர்களால் ஒப்புக்கொள்ளத்தக்கது என்ற உண்மையை வெள்ளையர் உணர்ந்து தமதுமனப்பான்மையை மாற்றிக்கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. அகம்பாவத்தையும் தற்பெருமையையும் கிறச்செருக்கையும் இராணுவத்திமிரையும் இன்னும் வெள்ளையர் வெளிப்படுத்திப் பிடிவாதஞ் செய்வார்களாகில் அலைகடலை எதிர்த்து அட்டகாசஞ்செய்தகான்யூட் என்ற மூட அரசனின் கதிக்குளாகிவிடுவார்களென்று நினைப்பூட்டுகிறேன். தான் அரசனென்ற மமதை மிகுதியினால் கலைகடலுங்கூடத் தனது கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற இறுமாப்புக்கொண்ட கான்யூட் என்ற அரசன் சமுத்திரத்தின் அலையினால் அடித்துக் கொண்டுபோகப்பட்டான். நீலக் கடலில் அலைக்குமேல் அலை அடித்தடுத்து வருவதுபோல இன்றைய உலகத்தில் வெள்ளையரை விழுங்குவதற்காகப் புதிதுபுதிதான இயக்கங்கள் எழுந்தவண்ணமாயிருக்கின்றன. சுதந்தர எழுச்சி என்ற கடற்பெருக்குத் தன்னைக் கவனிக்குஞ் செய்தற்கு முன்னதாக வெள்ளைக்காரன் நியாயம் நீதி தர்மம் என்ற மேட்டுப் பாங்கான கரைக்குச் சென்றுவிட வேண்டும். அதனால் அவனுக்கு மகத்தான பெருமை ஏற்பட்டேதீரும். பூமியிற் பெரும் பாகத்தையும் பூமண்டலத்தின் ஜனத்தொகையின் பெரும் பகுதியையும் தன் கைவசம் வைத்துக்கொண்டிருக்கும் வெள்ளையனுக்கு இது ஓர் கடுஞ் சோதனை காலமாகும். உலக சரித்திரத்தில் அளிக்கப் படாத அரியதோர் சந்தர்ப்பம வெள்ளையனுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனதா[illegible] அகந்தையை விடுத்து நாம் யாவரும் சமத்துவ முடையவர்களென்று கூறிக் கறுப்பரோடு உறவாடமுயலாமற் போனால் அவர்கள் தற்கொலை செய்து கொண்ட பழியோடு மனித வர்க்கத்திற்குப் பெரும் தீங்கைச் செய்த மகாபாதகத்திற்கிலக்காக நேரிடும். இருபது நூற்றாண்டுகளாக வெள்ளையர் பின்பற்றி நடக்கும் பகவான் யேசுவையும் அவரது போதனையையும் வெள்ளையர் அலட்சியம் செய்யப் போகின்றார்களா என்பதுதான் எனதுகேள்வி.

## புத்தூர்ப் பிள்ளையார் கோவில் மகாசன சபை

புத்தூர்ப் பிள்ளையார் கோவில் மனேச்சர்களாகிய திரு. க. சண்முகம், திரு. க மு செல்லப்பா அவர்கள் ஊரவர்களிடம் பிள்ளையார் கோவிலைப் பாரம் கொடுக்கும் நோக்கமாக ஊரவர்களின் கூட்டம் ஒன்றைக் கோவில் மண்டபத்தில் 1936ம் ஆ சித்திரை ௴ 30௨ வியாழக்கிழமை 3 மணிக்கு அழைத்தனர். அக் கூட்டத்தில் ஊரவர்களெல்லோரும் சமுகமளித்தனர். பின்வரும் பிரேரணை பிரேரிக்கப்பட்டுக் கூட்டத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது:—

"இன்று தொடக்கம் புத்தூர்ப் பிள்ளையார் கோவில் மாதப் பூசை செய்விக்கும் பன்னிருவரும் வருஷாந்தத் திருவிழாக்கள் செய்விக்கும் பன்னிருவரும் வருஷாந்தத் திருவிழாக்கள் செய்விக்கும் குடிகளின் அதிகாரிகள் பதினொருவரும் 500 ரூபாவுக்கு மேற்படத் திருப்பணி வேலை செய்வித்தோரும் மற்றவர்வர்களும் ஒரு சபையினராய் ஏற்பட்டுச் சபைக்குத் தேவையான பிரமாணங்களையும் இயற்றி உத்தியோகஸ்தர்களையும் நியமித்துப் பொதுச்சனங்களின் அதிகாரிகளாயப்பொது சன நன்மைக்கென்றே நடத்த இப்போது இருக்கும் மனேச்சர்கள் தங்கள் அதிகாரங்களை இச்சபைக்கேயித்தால் கொடுக்க இக்கூட்டத்தார் ஊரவர்களின் பொருட்டுக் கோவிலை மேற்சொல்லிய முறையில் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்."

அதேபிரகாரம் "புத்தூர்ப்பிள்ளையார்கோவில் மகாசனசபை" என்ற சபையையும் ஏற்படுத்தி அதற்கு வேண்டிய பிரமாணங்களையும் இயற்றி வேண்டிய நிர்வாகசபைதன்னையும் ஏற்படுத்தி மற்றும் உத்தியோகஸ்தர்களையும் தெரிவு செய்தனர்.

திரு ச. தில்லைநாதர் சபைத்தலைவராகவும திரு வே. செல்லப்பா உபசபைத் தலைவராகவும், திரு சு. தா. கந்தையா மனேச்சராகவும், திரு க. சண்முகம், திரு. சு. சதாசிவம பொருளதிகாரிகளாகவும், திரு. க. மு. செல்லப்பா காரியதரிசியாகவும் திரு. சு. இராசரத்தினம் கணக்குப் பரிசோதகராகவும் நியமிக்கப்பட்டனர்.

கூட்டம் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவெய்தியது.

—சடிக

## ஸர். எஸ். ராதாகிருஷ்ணன்.

இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்

ஸர் எஸ். ராதாகிருஷ்ணன் பம்பாய் மார்க்கமாக இங்கிலாந்துக்கு புறப்பட்டுவிட்டார் இவரை வழி அனுப்பக் கூட்டமாகப் பல பிரமுகர்கள் ஸ்டேஷனுக்கு வந்தவுடன் மாலை சூட்டப்பட்டார். ஸர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர், மேயர் ஜனாப் அப்துல் ஹமீதுகான், ராவ்பகதூர் ஜி. ஏ. நடேசன், ஸ்ரீமான்கள் எஸ். ஸத்தியமூர்த்தி, ஓ. பல்லா செட்டி ஐ. வி. எஸ். முதலியோர் வந்திருந்தனர்,

# தெய்வச் சிவநெறித் திருநாவுக்கரையனார்

## உய்யும்நெறிகடைப்பிடித்துஉழவாரப்படைகொண்டஉத்தமபக்தன்.

**சிவபெருமான் திருவருளிலேயே வயப்பட்டு நின்று மனத்தொண்டு நாத்தொண்டு காயத்தொண்டு ஆகிய மூன்றும் செய்த குரவர்.**

திருநாவுக்கரசர் என்னும் சொற்றொடர் திரு நாவு அரசர் என்னும் மூன்று சொற்களாலாகியது. திரு என்னும் சொல் பொருட்செல்வத்தையும், அருட் செல்வத்தையும் குறிக்கும். பொருட்செல்வம் அருட்செல்வத்தை வளர்த்தற்குச் சாதனமாயுதவுகிறதனால் அதுவுஞ் செல்வம் எனப்பட்டது. பொருட்செல்வம் உலக இன்பத்தை மக்களுக்கு உதவும்; அருட்செல்வம் பேரின்பத்தை உதவும்; இவ்வுலகில் அடையும் சிற்றின்பத்துக்குப் பொருட்செல்வம் எப்படி இன்றியமையாததோ அப்படியே பேரின்ப வாழ்வு அடைதற்கு அருட்செல்வம் இன்றியமையாதது. ஆகவின் பொருட்செல்வமும் அருட்செல்வமும் மங்கலம் என்று கூறப்படும். அவற்றுள், அருட்செல்வம்தான் சிறப்புள்ள மங்கலமாகும். இச்சசிறப்புள்ள மங்கலம் தரும் பொருள்களுக்கு முன்னும் செயல்களுக்கு முன்னும் திரு என்னும் சொல்லை அடைமொழியாக வைத்துக் கூறுதல் பண்டைத் தமிழ் வழக்கு இப்படிக் கூறுதல் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் காம் காணலாம். இவ்வழக்கை திருநீறு, திருவடி, திருக்கோயில், திருவேடம், திருமந்திரம், திருவலகிடல், திருநந்தனவனம், திருத்தொண்டு முதலிய சொற்களில் நாம் காணலாம். இவ்வழக்குப்பற்றி இறைவன் திருவருள்பெற்ற அடியார்களின் பெயரின் முன்னும் திரு என்னும் மங்கலச்சொல் வைக்கப்படுகின்றது. இக் காரணத்தினால் நாவுக்கரசர் பெயரும் திரு என்னும் மங்கல அடைமொழியைக்கொண்டது.

இனி நாவு என்பது நா. உகரச் சாரியை.

நா—என்னும் சொல் உகரச் சாரியை பெற்று நவு என்று ஆயிற்று.

நா என்பது நாக்கு. இங்கே அது ஆகுபெயராய் நாக்கிலிருந்து பிறக்கும் சொற்களைக் குறிக்கின்றது.

வாக்கு சொல் என்பன ஒரு பொருட்சொற்கள். வாகீசர் என்ற வடமொழிச் சொற்றொடரில் நாவுக்குப் பதிலாக வாக்கு வந்திருப்பது காண்க.

இனி அரசர் என்பதில் 'அர்' விகுதி மரியாதைப் பன்மையாகும். திருநாவுக்காசு என்று சொல்வதுமுண்டு,

அரசர் என்பது இறைவர் அல்லது தலைவர் என்ற பொருள் படும். ஒரு நாட்டின்கணுள்ள குடிகளுக்கு அவர்களை ஆளும் தலைமையுடையவனை அரசன் எனப்படுவான். ஓர் நாட்டு அரசன் தன் நாட்டிலுள்ள குடிகளை எல்லாம் நல்வழிப் படுத்தி எல்லா நலன்களையும் அடையும்படி செய்யும்படி செய்து உய்வித்தற் பொருட்டே அவர்களிடத்தில் தன்னுடைய ஆளும் ஆற்றலை (Reigning power) வழங்கல் வேண்டும். அவன் அவ்வாற்றலை தன நன்மையின் பொருட்டு வழங்குதல் கூடாது. அதுபோலவே யாராயினும் ஒருவர் பிறரொருவரிடத்திலாவது பலரிடத்திலாவது, ஆளப்படுபவர்கள் நலத்தின் பொருட்டே ஆளுகைசெய்யலாம்; தன்னலத்தின் பொருட்டு ஆளுகை செய்தல் நீதிமுறை யாகாது,

வடமொழிச் சொல்லாகிய ஈசன் என்கிற சொல் ஆளுகிறவன என்று பொருள்படும். (ஈச - ஆள்) வாகிசா என்னும் வடமொழிச்சொலில் ஈசர் என்பது அரசா என்பதற்குப் பதிலாக வந்தது காண்க.

கடவுள் உலகினை ஆளுதேலவன் ஆதலின் ஈசன் எனப்படுவான். கடவுள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்கள் தன் பொருட்டன்றி உயிர்கள் நலம் அடையும்பொருட்டுச் செய்கின்றான். ஆதலின எல்லாருங் காணத தன் குடிகளைக் காத்தற்றொழில் செய்யும் அரசனும் தனனுடைய ஆளுகையை அவ்வாறே குடிகளின் நலத்தின் பொருட்டே செய்தல் அரசியல் முறையாகும்.

இங்கே நாவுக்கரசர் என்னும் சொற்றொடர், நாவினை அடக்கி வாக்கினை ஆளும் வன்மையுடையவர் என்று பொருள்படும். அதாவது அவருடைய நாவிலிருந்து பிறக்கும் வாக்குக்கள் அற்பமேனும் சற்போதத்தாலாவது உயிர்ச்சார்பு பொருட்சார்புகள் பற்றியாவது உண்டாகாமல் சிவபெருமானுடைய அருள் வயப்பட்டு உண்டாகும் தன்மையுடையனவாகும். ஒருவர் தமது நாவினாற் சொல்லும் வாக்குகள் அற்பமேனும் சற்போதம் பற்றியாவது உயிர்ச்சார்பு, பொருட்சார்பு பற்றியாவது எழுமானால் அவர் வாக்குக்கு அரசராகார்.

திருநாவுக்கரசர் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்றபின் அவருடைய வாக்குக்கள் எல்லாம் சிவபெருமானுடைய அருள் வழியிற் பிறந்தலையே இயல்பாக உடையன அவைகள் அருள் வழியன்றி வேறு வழியிற் செல்லவேமாட்டா. இக் கருத்தைச் சேக்கிழார் சுவாமிகள், பெரிய புராணம திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்,

"மார்பாரப் பொழிகண்ணீர்
மழைவாருந் திருவடிவுமதுரவாக்கிற்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற்றாளே
சார்வான திருமனமுமுழவாரத்
தனிப்படையுந் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச்செய்வார்"

என்ற பாட்டிலும்,

"தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயுமுடையார்
புகுந்தனர் வீதியுள்ளே"

என்ற பாட்டிலும், வேறு சில பாட்டுக்களிலும் கூறி அருளினர்.

திருநாவுக்கரசர் தம்மைச் சமணர்கள் கொல்லவேண்டும் என்ற கருத்துடன் பொறுத்தற்கரிய கொடுந்துன்பங்கள் நான்கு முறை செய்துந் தாம் பதில் வார்த்தை யொன்றும் கூறாது நிறை குணத்தினின்றுஞ் சிறிதும் வழுவாமல் பொறையுடையராயிருந்தது அவரது வாக்கு வன்மையைத் தெற்றென எவர்க்கும் புலப்படுத்தியது இத்தகைய பொறையுடைமை வன்மையின் பாலது என்பது "வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை" என்னுந் திருக்குறள் உரையினாற் காண்க.

"கனையினை யுடையராகிக்
கழலடி பரவுவார்க்கு
உனையொரு கேடிலை பாலு
ருடறுமொபற்கரயரு வே"

என்று தாம் தேவாரத்திற் கூறியபடி அருமபெரும் பொறை யுடையராய் சிவபெருமானுடைய திருவடி நிழலிற் பற்றியிருந்ததனாலன்றோ அக்கொடுந்துன்பங்களெல்லாம் அவரை பொன்றுஞ் செய்தற்கு வலியற்றனவாயின.

திருநாவுக்கரசருடைய வாக்கு வன்மை அவர் இடையறாது பாடிய அருட்பாக்களினாலும் அப்பாக்களைப் பாடி அவர் செய்த பாம்பு கடித்து இறந்தவனைப் பிழைக்கவைத்தல் முதலிய பல அற்புதங்களினாலும் துணியப்படும்.

"ஆட்பாலவர்க் கருளும்
வண்ணமு மாதிமாண்பு
கேட்பான் புகிலளை
வில்லைகிளக்க வேண்டா"

என்று திருஞானசம்பந்தர் கூறியபடி சிவபெருமான் திருஞானசம்பந்தரை ஞானப்பாலுண்பித்து அறக்கருணையினாலே ஆண்டருளி திருநாவுக்கரசரைச் சூலைநோயை என வருத்தி மறக்கருணையிலால் ஆண்டருளினர். இருபெரியார்களும்சிவபெருமானால் ஆண்டருளப்பெற்றமையினாலே "ஆளுடைய பிள்ளையார்" என்றும், "ஆளுடைய அரசு" என்றும் சேக்கிழார் பெருமானாற் கூறப்பெறுவாராயினர். ஆயினும் சீகாழிப் பிள்ளையார் ஞானப்பாலுண்டு ஆளப் பெற்றமைக் கேற்பத் திருஞானசம்பந்தர் என்றும், திருவதிகை வீரட்டானத் தொண்டர் சூலைநோயால் வருந்தி ஆளப்பெற்றமைக்கு ஏற்ப திருநாவுக்கரசர் என்றும் அழைக்கப்படுவாராயினர். முன்னையர் ஞானப் பாலுண்டவுடனே "ஞானசம்பந்தர்" ஆயினர். பின்னையர் சூலைநோய் தமமை வருத்தப் பெற்று அவ் வருத்தம் தாம் பாடிய தேவாரப்பதிகத்தினால் நீங்கினவுடனே "நாவுக்கரசர்" ஆயினர். முன்னவர் ஞானப்பாலுண்டவுடனே தமது தந்தையார் 'யார் பாலையுண்டாய்' யென்று ஒருமொழி தொடுத்துக் கேட்க அந்த ஞானத்தைக் கேட்டற்குச் சாதனமாகிய திருச்செவியைத் தாம் பாடிய பாட்டின் முதலிற் சிறப்பித்துத் 'தோடுடைய செவியன்' என்று பாடியருளினர். பின்னையார் தாமடைந்த சூலைநோயின் வருத்தத்தினாலே அவ்வருத்தத்தைக் குறிப்பித்துக் "கூற்றாயினவாறு" என்று பாடியருளினர்.

திருநாவுக்கரசர் "செம்பொற்றாளே சார்வான திருமனம்" (நாயகன் சேவடி தைவருஞ் சிந்தை) உடையவராதலினால் அதன் வழி நாவினை ஆளும் வன்மையுடையராயினர்; அவர் நாவினை ஆளும் வன்மையுடையராதலின் அதன் வழி காயச் செயலினை ஆளும் வன்மையுடையராயினர். ஆதலின் அவர் ஆட்கொள்ளப்பெற்ற நாள் முதல் அவருடைய மனம், வாக்கு, காயம் மூன்றும் முறையே சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும் ஞானப் பாடற்றொடையுறுச் செவ்வாயும், 'உழவாரத்தின் படையுறுத திருக்கரமும்' உடையவைகளாய் சிவபெருமானது திருவருளிலேயே வயப்பட்டு நின்று மனத்தொண்டு, நாத்தொண்டு, காயத்தொண்டு ஆகிய மூன்று தொண்டுகளும் செய்து கொண்டேயிருந்தன.

சைவர்களாகிய நாம் நமது சைவசமய குரவருளொருவராகிய திருநாவுக்கரசருடைய பெருமையை அறிந்து உணர்ந்து சைவசமய விளக்கம் குன்றிய இக் காலத்தில் சைவசமயம் விளக்கமுற்று உலகம் நலம்பெறுதற் பொருட்டு நம்மாலியன்றவரை பயன்குறியாதுதொண்டுசெய்து வரல்வேண்டும். நமது மனம் நமக்கும பிறர்க்கும் தீய எண்ணங்கள் நாடாது நல்ல எண்ணங்களையே நாடல்வேண்டும்; அடிக்கடி சிவபெருமான் திருவடியைத் தியானம் செய்தல்வேண்டும். நமது வாக்கு எதிர்மறை முறையில் (Negative aspect) பிறர் குற்றங்களைப் பேசாதும் பயனில்லாத சொற்களையுரையாமலும் பிறர்மனம் வருந்தும்படியான மொழிகளைக் கூறாது இருத்தல் வேண்டும்; உடன்பாட்டு முறையில் (Positive aspect) பிறரிடம் இன்சொற்களைச் சொல்லியும் சிவபெருமானது புகழையும் அவன் அடியார்களது பெருமையையும் படித்தும் பிறர்க்குச் சொல்லித் தெரிவித்தும் வருதல்வேண்டும். நமது காயம் எதிர்மறை முறையில் பிறர்க்கு யாதொரு தீங்கு செய்யாமலும் உடன்பாட்டு முறையில் இயலும் வரை அறவினை செய்தும் வருதல் வேண்டும். இத்தகைய சைவசீலத்தை நாம் அடைய எப்பொழுதும் வருந்தி முயன்று பயின்று பயின்று சிவபெருமானுடைய திருவருளுக்கு ஆளாதல் வேண்டும். இப்பொழுதுள்ளபடி ஆண்மக்கள் மாத்திரமல்லாமல் நமது பெண்மக்களும் சைவ சீலத்தை அடைய முயன்றுவரல் வேண்டும்.

"சைவ சமயத் தனிநா யகனந்தி
யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறிச் சன்மார்க்கஞ்சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்துவைத் தானே"

என்று திருமந்திரத்தில் கூறியபடி சைவநெறியானது உலகத்துள்ளார் உய்வதற்குச் சிவபெருமானால் வகுக்கப்பட்ட நெறியாதலின் சைவர்களெல்லாம் விழுமிய சைவசீலத்துக்கு எடுத்துக்காட்டாக உலகில் விளங்கல் வேண்டும். இவ் உத்தமமான குறிக்கோளை மனதில் வைத்து சைவர்கள் ஒழுகுவார்களானால் அவர்கள் "திருநாவுக்கரசுகளார் திருத்தொண்டினெறி" உலகில் விளக்கமுறும்படி செய்கிற பெருந்தகையாளர்கள் ஆவார்கள். அப்படி அவர்கள் ஒழுகுதற்குச் சிவபிரான் அருள்புரிவாராக.

---

# விடுதலை

"உண்மையே தெய்வம்; கவலையற்றிருத்தலே வீடு; களியே அமிழ்தம்; அச்சமே நரகம்; அதனைச் சுட்டு நல்லதை நம்பி நல்லதே செய்க"

(வாகவி சுப்பிரமணிய பாரதி அவர்கள் இயற்றிய ஒரு சிறுநாடகம்.)

அங்கம் 1, காட்சி 1.

இடம்—வானுலகம்.

காலம்—கலிமுடிவு.

பாத்திரங்கள்—இந்திரன், வாயு, அக்நி, ஒளி (சூரியன்) ஸோமன், இரட்டையர் (அசுவினிதேவர்) மருத்துக்கள், வசுக்கள், தவஷ்டா, விசுவேதேவர் முதலாயினோர்.

இந்திரன்:—உமக்கு நன்று தோழரே.

மற்றவர்:—தோழா, உனக்கு நன்று.

இந்தி:—பிரமதேவன் நமக்கோர் பணியிட்டான்.

மற்றோர்:—யாங்ஙனம்?

இந்தி:—"மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக" என்று.

அக்நி:—வாழ்க தந்தை; மானுடர் வாழ்க

மற்றோர்:—தந்தைவாழ்க, தனிமுதல்வாழ்க.
உண்மை வாழ்க, உலக மோங்குக.
தீது கெடுக, திறமை வளர்க.

ஒளி:—உண்மையும் அறிவும் இன்பமுமாகிப்
பலவேனத்தோன்றிப் பலவினைசெய்து
பலபயன்உண்ணும்பரமநற்பொருளை
உயிர்க்கெலாம்தந்தையைஉயிர்க்கெலா [ந்தாயை
உயிர்க்கெலாந்தலைவனை,உயிர்க்கெலாந் [துணைவனை
உயிர்க்கெலம்உயிரை,உயிர்க்கெலாம்
அறிவிலேகண்டுபோற்றி [உணர்வை
நெறியினிலவன்பணிநேர்படச்செய் [வோம்.

இந்தி:—நன்று தோழரே, அமிழ்த முண்போம்,

மற்றோர்:—அமிழ்தம் நன்றே. ஆம். அஃதுண்போம். (எல்லாரும் அமிர்த பானம் செய்கிறர்கள்.)

இந்தி:—நித்தமும் வலிது.

வாயு:— நித்தமும் புதிது.

அக்நி:—தீரா விரைவு,

இரட்:— மாறு இன்பம்.

மருத்: என்றும் இளமை,

ஒளி: என்றுந் தெளிவு.

அக்நி: மண்ணுலகத்து மானுடர் வடிக்கும்
ஸோமப் பாலுமிவ் வமிழ்தமு மோர் [சுவை

இந்:—மண்ணுலகத்து மக்களே நீவிர்
இன்பங்கேட்பீர், எண்ணிய மறப்பீர்.
செயல் பல செய்வீர், செய்கையில் இளை
எஃணள வதனுல் ஏழல கிளையும் [ப்பீர்
விழுங்குதல் வேண்டுவீர் மீளவு மறப்பீர்,
தோழரோன் றெம்மை நித்தமும் சார்ந்தீர்,
ஸோமப் பாலோடு சொல்லமு தூட்டுவீர்,
நும்மையே அவுணர் நோவுறச் செய்தார்?
ஆஅஅ! மறவுக் குறம்பா. அரக்கா,
விருத்திரா, ஒளியினை மறைத்திடும் வேடா,
நமசிப் புழுவே, வலனே, நலிசெயுந்
துன்பமே,அச்சமே,இருளே,தொழும்பர்கா [ள்
பெயர்பலகாட்டும் ஒருகொடும்பேயே,
உருப் பல காட்டும் ஒரு புலைப் பாம்பே,
படை பல கொணர்ந்து மயக்கிடும் பாழே,
ஏடா, வீழ்ந்தனை, யாவரும் வீழ்ந்தீர்,
அரக்கரே, மனித அறிவெனுங் கோயிலை
விட்டுநீரொழிந்தால் மேவிடும்பொன்னுகம்
முத்தை நாள் தொடங்கி மானுடர் தமக்குச்
சீர்தாநினைந்து நாம் செய்ததை யெல்லாம்
மேகக் கரும்புலை விருத்திரன் கெடுத்தான்.
"வலியிலார் தேவர்; வலியவர் அரக்கர்
அறமே சோர்வது; மறமே வலியது
மெய்யே செத்தை; பொய்யே குன்றம்
இன்பமேசோர்வது;துன்பமேவெல்வது"
என்றோர் வார்த்தையும் பிறந்ததுமண்மேல்
மானுடர் திகைத்தார்; மந்திரத்தோழராம்
விசுவாமித்திரன், வசிட்டன், காசிபன்
முதலியோர் செய்த முதனூல் மறைந்தது.
பொய்ந்நூல் பெருகின பூமியின் கண்ணே
வேதங்கெட்டு வெறுங்கதை மலிந்தது!
போதச்சுடரைப் புகை யிருள் சூழ்ந்தது.
தவமெலாங் குறைந்து சதிபல வளர்ந்தன
எல்லாப் பொழுதினும் ஏழை மானுடர்
இன்பங் கருதி யிளைத்தனர், மடிந்தார்
கங்கை நீர் விரும்பிக் கானனீர் கண்டார்,
அமுதம் வேண்டி விடத்தினை யுண்டார்.
ஏன!
வலியரே போலுமிவ் வஞ்சக அரக்கர்!
விதியின் பணிதான் விரைக.
மதியின் வலிமையால் மானுடன் ஓங்குக.

ஒளி: ஒருவனைக் கொண்டு சிறுமை நீக்கி
நித்திய வாழ்விலே நிலைபெறச் செய்தால்
மானுடச்சாதி முழுதுநல் வழிப்படும்;
மானுடச்சாதி யொன்று; மனத்திலும்
உயிரிலுந் தொழிலிலும் ஒன்றே யாதும்

தீ:—பரத கண்டத்திற் பாண்டிய நாட்டிலே
விரதந் தவறிய பவதியர் குலத்தில்

வசுபதி யென்றே சிறுவன் வாழ்கின்றன்.
தோளிலே மெலிந்தான், துயரிலேயமிழ்ந்
நாளும்வறுமைநாயொடுபோருவான் [தான்
செய்வினை யறியான், தெய்வமுந் துணியா
ஐய வலையி லகப்பட லாயினன். [ன்
இவனைக்காப்போம். இவன்புவிகாப்பான்.

காற்று:—உயிர் வளங் கொடுத்தேன்; உயிரால் வெல்க.

இந்தி:—மதிவலி கொடுத்தேன். வசுபதி வாழ்க.

சூரியன்:—அறிவிலே ஒளியை அமைத்தேன் வாழ்க.

தேவர்:—மந்திரங் கூறுவோம். உண்மையே தெய்வம்.
கவலையற் றிருத்தலே வீடு. களியே
அமிழ்தம்; பயன்வருஞ் செய்கையே யற
அச்சமே நரகம்; அதனைச்சுட்டு [மாம்,
நல்லதை நம்பி நல்லதே செய்க.
மகனே வசுபதி மயக்கந் தெளிந்து.
தவத்தொழில் செய்து தாணியைக் காப் [பாய்.

காட்சி 2.

பாண்டி நாட்டில் வேதபுரம், கடற்கரை, வசுபதி,தனியே நிலவைப்பார்த்துக் கொண்டிருக்கிறன்.

வசுபதி பாடுகிறன்:-

*நிலவுப் பாட்டு.*

வாராய் நிலவே வையத் திருவே
வெள்ளைத் தீவில் விளையுங் கடலே
வானப் பெண்ணின் மதமே. ஒளியே
வாராய் நிலவே வா.

மண்ணுக்குள்ளே யமுதைக் கூட்டி
கண்ணுக்குள்ளே களியைக் காட்டி
எண்ணுக்குள்ளே இன்பத்தேனிவாய்
வாராய் நிலவே வா.

இன்பம் வேண்டில் வானைக் காண்பீர்
வானெளி தன்னை மண்ணிற் காண்பீர்
துன்பந் தானேர் பேதைமை யென்றே
வாராய் நிலவே வா.

அச்சப்பேயைக் கொல்லும்படையாய்
வித்தைத்தேனில் விளையுங் களியாய்
.....................
வாராய் நிலவே வா.

---

### அனாத ஹிந்து முஸ்லீமானான்.

திருக்கோவலூர் மே 4—

28-4-36 செவ்வாய்க் கிழமை, ஒரு 5 வயதுள்ள பிள்ளை தன் தாயுடன் திருவண்ணாமலையிலிருந்து இவ் ஊர் அடைந்தான். அவன் தாய் தேக அசௌக்கியத்தாலும் வறுமையின் கொடுமையாலும், உயிர் துறந்தாள்; பிறகு அவள் பொது மக்களால் அடக்கஞ் செய்யப்பட்டாள். காப்பவர் இல்லாத அந்தக் குழந்தையை ஓர் முஸ்லீம் கண்டர் வளர்த்து வருகிறார். அந்தக் குழந்தைக்கு நூர்முகம்மது என்ற பெயர் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### விவாகம்.

அம்பலவாணர்—சிதம்பர அம்மாள்

ஹற்றனில் பிரபல வியாபாரியும் காணகர் வாசியுமாகிய அம்பலவாணர் முருகேசு அவர்களின் சிரேஷ்ட புத்திரி சிதம்பரத்திற்கும் அவ்வூர் கிஞசித்தம்பி நல்லதம்பியின கனிஷ்ட புத்திரன் அமபலவாணர் ஆசிரியர் அவர்கட்கும் சித்திரைமீ 25உ (7-5-36) வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் பெரியோர்கள் சமுகத்தில் பணமகள் இல்லத்தில் விவாகம் இனிது நிறைவேறியது. தம்பதிகள் நீடூழிவாழ்க எம்பெருமான் திருவருள்புரிவாராக.

வாழ்க அத்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்த னுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந் துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸ்ரீ
வைகாசி மீ ௧௨ வியாழக்கிழமை

## இலங்கையிற் கொலைகள் அதிகப்படல் II.

கொலைகள் இந் நாட்டில் அதிகப்படுதற்குப் பிறிதொரு பிரதானமான காரணம் சமயக் கல்வியூட்டப்படாமை, எந்தச் சமயவாதிகளாயினும் கொலை செய்யத்தக்கதென வாதிக்கப் போவதில்லை; இலங்கையிலுள்ள பிரதானமான சமயங்கள் பௌத்தம் சைவம் இஸ்லாமியம் கிறீஸ்துவம் என்பனவாம்; இவைகளெல்லாம் கொலைக்கு, கொலையுள்ளும் விசேஷமாக மனுஷர்க்கொலைக்கு மாறுகட் போதிப்பன; கொலை மாத்திரமன்று கொலைக்குக் காரணமான மதுபானத்தையும் இச்சமய நூல்கள் விலக்குவன; பழைய காலத்தில் கல்வி பயிற்றும் விஷயத்தில் இந்நாட்டு மூதாதைகள் சமயக்கல்வியையே பிள்ளைகளுக்குப் பிரதானமாக ஊட்டிவந்தார்கள்; ஆனால் இக்காலத்தில் நமது அரசினர் இலங்கைப்பிள்ளைகட்கு ஊட்டிவருங் கல்வியிலே சமய நூலின் மணந்தானுமில்லாமற் போய் விட்டது; அரசினர் இவ்விஷயத்திலே பராமுகமாயிருந்தாலும் முன்னர்ச் சிலகாலமாக பாதிரிமார் பௌத்தர் சைவர் இஸ்லாமியர் தாம் தாம் வைத்துநடாத்தும் பள்ளிக்கூடங்களிற் பயிலும் பிள்ளைகட்குத் தத்தம் சமயக்கல்வியை ஊட்டுதற்கான ஒழுங்குகளைச் செய்துவந்தார்கள். அரசினர் நன்கொடைப்பணம் பெறும் வித்தியாசாலைகளிலும் சமயக்கல்வியறிவைப் பிள்ளைகட்கு ஊட்டுவதற்கு அக்காலத்திலே சிறிது நேரம் உண்டு; ஆனால் இக்காலத்திலென்னவோ வித்தியாபகுதியார் பரீட்சைக்குரிய பாடங்களை அதிகப்பட விதித்துச் சமயநூற் பயிற்சிக்குப் போதிய நேரம் இல்லையாகச் செய்து விட்டனர்; வியாபாரார்த்தமாக வித்தியாசாலைகளை வைத்து நடாத்தும் அதிபர்களும் கூலிக்கு மாரடிக்கும் உபாத்தியாயர்களும் "மூடக் கழுதைக்குச் சறுச்சினது சாட்டு" என்ற விதமாக நேரமில்லை என்ற நியாயத்தைச் சொல்லிச் சமயநூற் கல்வியை ஊட்டாது ஒழிந்தனர், இளமை தொடக்கம் சமயக் கல்வி பயிற்றப்படாமையினால் இங்குள்ள வாலிபர்கள் எத்தனையோ பேர் நிரீச்சுரவாதம் பேசுதல் குதர்க்கங்கூறுதல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற கொள்கையுடையராய் நடத்தல் முதலாய் அநர்த்தங்களில் ஈடுபட்டு இடர்ப்படுகின்றார்களே! சமயக் கொள்கைகளை அறிந்து ஒழுக்கமாக நடவாத சனங்களுக்கு எக்காலத்திலாயினும் உய்தியுண்டா? அப்படிப்பட்ட சனங்களைப் பிரசைகளாகக் கொண்டாளும் அரசினருக்கு நன்மையுண்டா? இரண்டும் இல்லையென்றே சொல்லல்வேண்டும். ஆதலால் அரசினர் அந்தந்தச் சமயத்துப் பிள்ளைகட்கு அவ்வச் சமய நூல்களை வித்தியாசாலைகளிற் பயிற்றுதற்கான ஒழுங்குகளைச் செய்யும் வரையில் கொலை முதலிய தீமைகள் அதிகப்படுமென்றே நாம் சொல்லலாகும். சமயக்கல்வியூட்டும் பொறுப்பை முற்றாக அரசினரிடத்திலேயே சுமத்தி விட்டு ஊரவர் வாளாவிருப்பதும் தவறாகும். ஊரவர்களும் தங்கள் பிள்ளைகட்கு உலகக்கல்வி உத்தியோகக் கல்விகளைக் காட்டிலும் சமயக்கல்வியே ஆவசியகம் வேண்டியதென்பதை உணர்ந்து அக்கல்வியை விருத்தி பண்ணுவதற்கான ஒழுங்குகளைச் செய்தல்வேண்டும்.

இனி, இக்காலத்திலே இலங்கையின் பிரதான பட்டினங்களிலே சதா நடந்துவருவனவும் பல்லாயிரக்கணக்கான சனங்களால் ஆடவர் மகளிர் கிழவர் சிறுமியரென்ற பேதமின்றிச் சென்று ஆர்வத்தோடு பார்க்கப்படுவனவுமாகிய பேசும்படக்காட்சிகளினால் கொலைமாத்திரமன்று, ஏனைய தீமைகளும் நாட்டில் அதிகப்பட்டு வருகின்றன என்பது நிசம். இப்படக்காட்சிகளுள் புராண இதிகாச சம்பந்தமானசரித்திரங்களைக்கொண்ட படக்காட்சிகளினால் நன்மையேயன்றித் தீமையில்லையென்று சொல்லலாகும். ஆனால் இக்காலத்தில் சனசமூக வாழ்வைக் குறிப்பன என்று எழுதப்படும் விபரீத கதைகள் சம்பந்தமான படக்காட்சிகளும் ஆங்கில கதைப் படக்காட்சிகளும் பார்ப்பவருள்ளத்திலே புதுமாதிரியான கொலை நுட்பமான களவு, நவீன முறையில் நாரியரைக் கவர்ந்து செல்லுதல், மதுபானம், சூது, நீதியற்றகாதல் என்னுமிவைகளைக் கிளர்த்தி விடுகின்றனவென்று பல அறிஞர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆதலால், படக்காட்சிக்கு அநுமதி கொடுக்கும் அதிகாரிகள் படங்களைத் தொடக்கத்திலே பார்த்துப் பார்த்துத் தவிர்க்கவேண்டியவற்றைத் தவிர்த்தே விடல்வேண்டும்.

மேலும் கொலை முதலாம் குற்றங்களைத் தவிர்த்தற்குச் சனங்களிடத்தில் இயன்றவரையிற் கல்வியறிவும் சற்சனர் சகவாசமும் நல்ல பொழுது போக்கும் ஆவசியகம் இருத்தல் வேண்டும். சிங்கள நாட்டிலே இக்காலத்தில் வளர்ந்தவர்கள் கல்வி பயிலுதற்கான இராப்பள்ளிக்கூடங்கள் இடங்கள்தோறும் தாபிக்கப்படலாயின. இப்படியான இராப்பள்ளிக்கூடங்களை யாழ்ப்பாணத்திலும் தாபித்து நடத்துதல் ஆவசியகமாகும்; இவற்றுடன் கிராமந்தோறும் இலவச வாசிகசாலைகளும் இருக்கச்செய்தல் மிகவும் நன்மையாகும்.

இவை மாத்திரமல்லாமல் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் இலங்கையிலே ஊரவர்கள் போலிசருக்குத் துணைபுரிவதில்லையென்றும் முறைப்பாடு அதிகாரிகளிடம் உண்டு; அந்த விஷயத்தில் அக்குறைவு சனங்களைப் பொறுத்ததோ போலிசரைப் பொறுத்ததோ என்பதே ஆராயவேண்டியது; இலங்கையிலுள்ள போலிசார் ஊரவர்களெல்லாரும் குற்றவாளிகள் எந்தநேரத்திலும் குற்றஞ்செய்வார்கள் தாங்கள் அவர்களை அகப்படுத்தவேண்டுமென்ற விபரீத நோக்கத்துடன் காணப்படுகிறார்கள். மேலைத் தேசத்திலேயுள்ள போலிசார் அப்படிப் பட்டவரல்லராம்; இங்குள்ள போலிசாராகப்பட்டவர்கள் உண்மையான குற்றவாளிகள் விஷயத்திற் றவிர ஏனைய சனங்களோடு இதமாக நடந்துகொள்ளப் பழகுதல்வேண்டும்; சனங்களோடு நன்கு ஊடாடுதல் வேண்டும். போலிசாரானவர் ஊரவர்களை அணைத்தாற்றான், தங்களிடத்தில் ஊரவர்கட்கு நம்பிக்கை வரச் செய்தாற்றான் அவ்வவ்வூரவர்களின் உதவியையும் பெற்றுக் குற்றங்களைக் கண்டுபிடித்துக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள் ஆக்குதல் முடியும்.

---

## பெரியார் அன்சாரியின் பரிதாப மரணம்

உலகத்தின் நிலையாமையை உணர்ந்து தாம் நிலைபெறக் கருதிய பெரியோர் பலர் தமது புகழை நிறுவித் தாம் உயிர்நீத்தனர். இத்தகைய பெரியாருள் டக்ரர் அன்சாரியும் ஒருவர் ஆவர். இவர் இம் மாதம் 10-ந் திகதியன்று முஸோரியிலிருந்து டில்லிக்குப் போகும் வழியில் எவரும் எதிர்பாராதவிதமாக றெயில்வண்டியிலேயே திடீரென மரணமடைந்தார். இவரது எதிர்பாராத மரணத்தால் இந்தியா முழுவதும் வருந்துகின்றது. இந்திய தேசபக்த சிரோன்மணிகளாகிய பண்டித மோதிலால்நேரு, கமலாநேரு, வித்தல்பாய் படேல் ஆதியோரது பிரிவால் இந்திய அன்னை எவ்வாறு மனந்துடித்து வருந்தினளோ அவ்வாறே டக்ரர் அன்சாரியின் பிரிவாலும் அவள் ஆற்றொணாத் துயரத்துள் ஆழ்ந்து வருந்துகின்றாள். டக்ரர் அன்சாரி ஒரு பெரிய வைத்தியர். இந்திய தேசிய மகாசபையில் ஒரு முக்கியமான தலைவர். அன்றியும் மகாத்மா காந்தியின் அந்தரங்க நண்பர். அதுவேயுமன்றி அவரது அரசியற் றுறையிற் சிறப்புற்று விளங்கிய ஒருவரும் ஆவர். இரண்டாவது வட்டமேசை மகாநாட்டிற்குக் காந்திஜி லண்டன் சென்றஞான்று எவ்விதமும் டக்ரர் அன்சாரியையும் உடனழைத்துச் செல்வதற்கு அவர் முயன்றமையே காந்திஜிக்கும் டக்ரர் அன்சாரிக்கு மிடையே யுள்ள நெருங்கிய தொடர்பையும் டக்ரர் அன்சாரியின்மீது காந்திஜிக்குள்ள மதிப்பையும் நன்கு விளக்கும். டக்ரர் அன்சாரி ஒரு முஸ்லிமாகப் பிறந்தாராயினும், அவர் முஸ்லிம்களுக்காக மாத்திரம் உழைத்து வந்த ஒருவரல்லர். சாதிமத பேதம் பாராட்டாமல் இந்தியமக்கள் எல்லோருக்கும் ஒரேவிதமாக உழைத்து வந்த உத்தமச் செல்வர் ஆவர். மாசற்ற தேசபக்தர்களில் அவரும் ஒருவர். அது மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள வைத்தியர்களுக்குள் அவர் சிறந்த வைத்தியராகவும் விளங்கினர். அவர் இங்கிலாந்துக்குச் சென்று எடின்பரோ சர்வகலாசாலையிற் சேர்ந்து கற்றுத் தேர்ந்தவர். இங்கிலாந்திலேயே பத்து ஆண்டுவரை வைத்தியத் தொழில் நடாத்தி வந்தவர். அவர் இந்தியாவிற்குத் திரும்பியபின் 1912—13-ம் ஆண்டுகளில் துருக்கிக்கும் பால்கனநாடுகளுக்கு மிடையே யுத்தம் நடந்த காலை துருக்கிக்கு ஒரு வைத்திய தாதுக் கோஷ்டியை அனுப்பி வைக்க ஒழுங்குகள் செய்த பக்தன். இவரிடம் பணமின்றி வைத்திய உதவி பெற்றவர்கள் தொகையோ எண்ணிலடங்காது. அக்காலத்தில் இவர் அரசியல் விஷயங்களில் ஈடுபடாத போதிலும், தேசியக் கருத்துக்களும் உணர்ச்சிகளும் அவர்பால் அதிகமாகக் காணப்பட்டன. 1917-18 இல், அனிபெசன்ட் அம்மையாரால் ஆரம்பிக்கப்பெற்ற சுதேச ஆட்சி (Home Rule) இயக்கத்தின் போதே இவர் முதன்முதல் அரசியல் விஷயங்களிற் கலந்துகொண்டார். 1920-ம் ஆண்டில் அவர் கிலாபத் ஒத்துழையாமை இயக்கங்களில் ஒரு பிரதானமான தலைவர் ஆனார். அவ்வாண்டிலேயே முஸ்லிம் லீக்கின் தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். ஈராண்டுகளின் பின், கயாவில் நடந்த கிலாபத் மகாநாட்டிற்கும் தலைவரானார். இவரது தேசபக்தியும் சிறந்த தொண்டும் திசைதொறும் சென்று பரவலாயின. இந்தியமக்கள் இவர்பால் அளவிறந்த அன்பும் நம்பிக்கையும் வைத்தனர். 1927-ம் ஆண்டில் சென்னைமாநகரில் நடைபெற்ற இந்திய தேசிய மகாசபை டக்ரர் அன்சாரியின் தலைமையிலேயே நடைபெறலாயிற்று. 1930—32-ம் வருடங்களில் இந்தியாவிற் சத்தியாக்கிரகப் போர் நடைபெற்ற ஞான்று டக்ரர் அன்சாரிக்கு உடல்நலன் குன்றியிருந்தபோதினும் அவர் அதனையும் பொருட்படுத்தாமல் அப் போரிற் கலந்து அன்னையின் அடிமைத்தளையை நீக்க அருந் தொண்டு புரிந்தார். சிறைத் தண்டனையும் அடைந்தார். அவருக்குச் சுவாசப்பையில் நோய்உண்டானமை காரணமாக, சென்ற ஒரு வருடமாக அவர் அரசியல் வேலைகளில் அதிக தீவிரமாகக் கலந்துகொள்ளாமல் விலகி ஆறுதல்பெற்றிருந்தார். எனினும் காந்திஜீயைப் போலவே, அவரும் மிக்க நெருக்கடியான காலங்களில் ஆழ்ந்த அநுபவத்தோடுகூடிய அரிய ஆலோசனைகளைக் கூறிவந்தார். 1933-ம் ஆண்டில் சட்டமறுப்பியக்கம் சிறந்து சோர்வடைந் திருந்தமை கண்டு, அவர் சமயோசிதமாக முன்வந்து தேசிய மகாசபையார் சட்டசபையைக் கைப்பற்ற முயலுதல்வேண்டுமென்று ஆலோசனை கூறியமையே இதற்குத் தக்க சான்றாகும். இவர் காட்டிய இவ்வழியே சிறந்தவழி என்பது இப்போது எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. டக்ரர் அன்சாரி அவர்கள் தேசிய மகாசபையிற் கலந்து உழைத்தமையாலேயே அச்சபை முஸ்லிம் சமூகத்தினரின் ஒற்றுமையையும் நனமதிப்பையும் பெற்றிருக்கின்றதென்று நிர்க்கமாகக் கூறலாம். டக்ரர் அன்சாரி இஸ்லாம் மதத்தினர்க்கு எவ்வாறு தாவிப்படர்தற்கு ஒரு தக்க விருக்ஷமாக மிளிர்ந்தாரோ அவ்வாறே இந்திய தேசிய இயக்கத்திற்கும் ஒருபெரிய விருக்ஷமாக விளங்கினர். இவ்விருக்ஷம் சாய்ந்தமையால் ஏற்பட்டவெளியோ மிகப் பெரியதொரு வெளியாகும். இவ்வெளியை அடைத்தற்கு இப்போதைக்கு ஒருவரும் இல்லையெனவே கூறவேண்டும். இவரது மரணத்தைக் குறித்துக் கூறுமிடத்து, மிஸ்டர் எம். ஆர். ஜெயக்கர், "இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஒற்றுமையை உண்டாக்குதற்கு உறுதுணையாக இருந்த ஓர் உத்தமர் உயிர்நீத்தார்" என்றும், மௌலானா ஷவுக்கத்அலி, "பெரிய நண்பரும், தைரியம் நிறைந்த தலைவரும், இந்திய அன்னையின் அரிய புதல்வரும் ஆகிய டக்ரர் அன்சாரி மரணமடைந்தமையைக் கேட்க மனம் வருந்துகின்றது" என்றும், சேர். எச். பி. மோடி, இத்தச் சமையத்தில் அவர் இறந்தமை தேசத்திற்கு ஈடுசெய்ய முடியாத ஒரு நஷ்டமாகும் என்றும் முறையே கூறுதல் காண்க.

இந்திய அன்னை ஓர் ஒப்பற்ற புதல்வனை இழந்தாள். காந்திஜீ ஓர் அரிய தோழனை இழந்தார். ஜவஹர் ஒரு நண்பனை இழந்தார். ஏழை இந்தியமக்கள் தமக்கு என்றென்றும் உதவிநின்ற இணையற்ற வள்ளலை இழந்தனர். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய இப்பெரியாரது எதிர்பாராத மரணம் எவரைத்தான் வருந்தச்செய்யாது? இவரது திவ்விய பெயரும் இவர் செய்துள்ள சிறந்த பணிகளும் இந்திய சரித்திரத்திற் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கத் தக்கனவாகும்.

---

# அரிமாநோக்கு.

### சேர். மெல்லின் மரணம்

இலங்கையில்நடைபெறும் கொலைகளை நினைக்கும்போது நெஞ்சு திடுக்கிடுகின்றது. கத்தி வீச்சுகளுக்கும் துப்பாக்கிச் சூடுகளுக்கும் இன்னபல பிற கோரச்செயல்களுக்கும் இலங்கை ஒரு களம் என்று எண்ணக் கூடியதாகக் கொலைகள் நடைபெறுகின்றன. இதில், சிலசமயம், கொலையென்னும் விளையாட்டில் தலைமை வகிக்க முற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சென்றவருடம், இங்கு மிக்க குரூரமான செயல் ஒன்று நடைபெற்றது. ஒரு தமிழ் மகனும் அவன் மனைவியும் பிள்ளையும் ஒரு சிங்கள வெறியனால் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். இவ்வருடமும் சென்ற வெள்ளிக்கிழமையன்று ஒரு பரிதாபகரமான செயல் நடைபெற்றதைக் கேட்க எந்த இலங்கைவாசிதான் மனம் வருந்தான். சேர். எச். டி. மெல்லும் அவரது தோட்டத்தில் வேலை செய்யும் மற்றொருவரும் ஒரு சிங்களப் பேயாற் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். சேர். டி. மெல் பல தோட்டங்களுக்கு முதலாளியாக உள்ள ஒருவர். இலங்கையில் ஒரு சிறந்த அரசியல் வாதியாக விளங்கினவர். அரசாங்கசபையில் இவர் நிகழ்த்திய விரிவுரைகள் என்றும் நின்று நிலவுந் தன்மையன. வியாபாரத் துறையிலும் இவர் செய்த பணிகள் பலவாகும். இத்தகைய ஒருவரது மரணம் மிக்க பரிதாபகரமாக முடிந்தமை பற்றி நாம் பெரிதும் வருந்துகின்றோம். இவரது பிரிவு இலங்கைக்குப் பெரியதொரு பிரிவாகும்.

---

### ஏனோ இரகசியம் ?

சென்ற 9-ந் திகதி சனிக்கிழமை கூடிய யாழ்ப்பாணம் நகரசபைக் கூட்டத்தில் அதன் தலைவர் யாழ்ப்பாணம் நகரசபை முனிசிப்பல் கவுன்ஸிலாக மாற்றப்பட வேண்டும் என்பது சம்பந்தமாக ஸ்தலஸ்தாபன நிர்வாகசபைத் தலைவரிடமிருந்து தமக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறதென்று தெரிவித்தார். மற்றைய அங்கத்தவர்கள் தாமும் அதை அறிந்து அதைப்பற்றி ஆலோசனை கூறக்கூடியதாகவும், அவ்விஷயமாக ஒவ்வொரு அங்கத்தவரும் எவ்வித அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறார்கள் என்பதை விரிவுறப்போந்து அறிந்துகொள்ளத் தக்கதாக அவ்விஷயம் பகிரங்கமாகச் சபையிலே விவாதிக்கப்படவேண்டுமென்று ஒரு அங்கத்தவர் கேட்டுக்கொண்டார். தலைவரோ அந்தக் கடிதம் தமக்குமாத்திரமே பிரத்தியேகமாய் அனுப்பப்பட்டிருப்பதாகவும் மற்றைய அங்கத்தவரும் அவ்விஷயத்தைப் பகிரங்கமாக விவாதித்தல் அவசியமென்று வற்புறுத்துவார்களாயின் தாம் அதற்கு மாறில்லை எனவும் ஏதோ மிக்க கஷ்டப்பட்டு உடன்பட்டாராம். பொது விஷயங்களைப் பற்றிய இத்தகைய நடவடிக்கைகளில் ஏனோ இவ்வளவு இரகசியம் யாம் அறியோம்.

---

### உடையவனிற் கைப்பற்றினவன் மிடுக்கன்.

உலகம் எங்கும் இப்போது ஏகாதிபத்தியமல்லக் "தத்திபாத்தியம்" தான் அதிகரித்திருக்கிறது என்று கூறவேண்டியிருக்கிறது. இத்தப் பாத்தியங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கிறது பாருங்கள். மொரோக்கோவில் பிரான்சுக்கு இருப்பது இத்தப் பாத்தியமே ஆகும். அங்குள்ள முஸ்லீம் வீரர்களைப் பிரான்ஸ் அடியோடு அழித்துவிட்டு, மொரோக் கோவைத் தனது நாட்டோடு சேர்த்துவிட்டது. பிரிட்டன் கெனியாவைக் கைப்பற்றினதும் இக்கத்திபாத்தியத்தாலேயாகும். பெல்ஜியம் கொங்கோநாட்டைப் பற்றியதும் இதனாலேயாகும். ஜெர்மனி மேற்கு ஆபிரிக்காவில் தனக்கென ஒரு பகுதியை வலித்து வருத்துக் கொண்டதும் இதனாலேயாகும். ஆதலால், நாம் அநியாயமாக இத்தலியை மாத்திரம் குற்றஞ் சொல்வது பிழையென்ற எண்ணம் திடமொன்று நமக்குண்டாகின்றது? ஏன்? வலியவன் மெலியவனை அடிக்குமட்டும் அடித்தபின், தனது செயலுக்கு ஏதோ ஒரு சமாதானங் காட்டி விடுதலே மரியாதையும் வழக்கமுமாக இருக்கும்போது அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் தேனுமாகப் பேசும் மற்றைநாடுகளின் தன்மைகளைமறந்து இத்தலியை மாத்திரம் ஏதோ அரக்க இராச்சியம் என்று தனிமையாகத் திட்டித் தொலைத்து விடுவது பாரபக்ஷமற்ற நீதியாகாது என்று நினைக்கின்றோம். ஏனைய நாடுகள் பாலுக்குக்காவல் பூனைக்குந் தோழன் என்றவாறு தாம் தூரத்தில் இருந்து கொண்டே ஏதோ சில சில்லறை உபாயங்களால் இத்தலிக்கு இன்னலைத் தேடிவிடலாம் என்றெண்ணின. அது பலிக்கவில்லை. அபிஸீனியாவில் இத்தலிக்குச் சில பிரத்தியேகமான சிலாக்கியங்கள் இருந்தாற் போதும் என்றதே முஸோலினி அப்போது கேட்டுக் கொண்டதாகும். இப்போதோ அவர் அபிஸீனியா இத்தலியின் சொந்த உடைமை ஆகிவிட்டதென்றும், ஆதலால், எந்த நாட்டினர்க்கும் அங்கு விசேஷ சிலாக்கியங்கள் காட்ட முடியாதென்றும் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். மதில்மேற் பூனைகள் போல் இருந்த வல்லரசுகள் இனி என்செய்யப்போகின்றனவோ? யுத்தத்திற்கு முன்னரேயே இத்தலியை அவர்கள் ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை. இப்போது யுத்த வெறி கொண்டு நிற்கும் இத்தலியை அவர்கள் என்ன செய்துவிட முடியும்? ஆயின் இப்போதில்லாவிடினும் வருங்காலத்திலேனும் பல வேடிக்கைகளை நாம் எதிர்பார்க்கலாம் என்றே கூற வேண்டியிருக்கிறது.

---

### கலகம் விளைத்ததாக வழக்கு.

ஆனைக்கோட்டைச்சந்தியில் தேத்தண்ணீர்க் கடையிலிருந்து சின்னத்தம்பி சீனி என்னும் வண்ணானை நாகமணி இளையதம்பி நாகமணி சரவணமுத்து இளையதம்பி தம்பிப்பிள்ளை வயிரமுத்து கதிரித்தம்பி ஆகியவர்கள் அடித்துக் கலகம் விளைத்ததாக அவர்கள்மீது பொலிஸ் கோட்டில வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. மேற்படி சீனி என்பவனிடம் எதிரிகள் மாங்காய் வாங்கிக்கொண்டு அதற்குப் பணங்கொடுக்கவில்லையென்றும், சீனி பணத்தைத் தரும்படி எதிரிகளைக் கேட்டது காரணமாகவே மேற்படி கலகம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

---

### நூறுகிடுகின்விலை 5 ரூபாவா?

சென்ற அரசாங்க சபைக் கூட்டத்தில் வைர்காலத்துறையிலுள்ள மாடுகளுக்குரிய "குவாறன்ரயின்" கொட்டிலை வேயும் விஷயத்தில் 100 கிடுகின்விலை என்ன என்று மிஸ்டர் N. W. பெரிஸ் கேட்டபோது மிஸ்டர் சேனநாயக்க 100 கிடுகின்விலை ரூபா 5 என்று சொல்லியிருக்கிறார்.

# கோட்டுச் செய்திகள்

(நமது நிருபர்)

### கண்டகோடரியால் வெட்டியதாக

சென்ற 11-5-36 புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் தாராக்குளத்தடியில் வசிக்கும் சின்னத்தம்பி என்பவர் அவ்வூர் வைத்தியகாதர் ஐயாத்துரை என்பவரை ஓர் கண்டகோடரியால் வெட்டினதாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

தாராக்குளத்தில் வசிக்கும் இராசையா என்னும் மை பூசுபவர் (Painter) கூறியதாவது:—

சென்ற 9ம் திகதி 10 மணியளவில் நான் தாராக்குளத்தடி ரோட்டால் ஒரு சயிக்கிளிற் போகும்போது ஐயாத்துரை வீட்டுப் படலையில் சின்னத்தம்பி என்பவர் ஐயாத்துரைக்கு ஓர் கண்டகோடரியால் வெட்டினதைக் கண்டேன். சின்னத்தம்பியுடன் முருகேசு என்பவரும் நின்றார். இவற்றை எல்லாம் என்னுடன் நின்ற தப்பிராசாவும் கண்டார்.

நான் இதைக்கண்டதும் எனது சயிக்கிளை வேலியுடன் கொண்டுபோய்ச் சார்த்திவிட்டு எதிரியைப் பார்த்து வெட்டாதே என்று சத்தமிட்டேன். இதற்கிடையில் அவர் வெட்டிவிட்டு ஓடிவிட்டார். நான் தான் காயப்பட்டவனைப் பொலிஸ் தானத்துக்கு ஏற்றிச் சென்றேன். வழக்கு 22-5-36 க்குத் தவணை யிடப்பட்டது.

### சிறுமியைக் கடத்தியதாக

சென்ற மாசி மாதம் 13-ந் திகதி கரையூரில் வசிக்கும் அந்தோனி-திறேசம்மா என்னும் சிறுமியை அவளது மாமன் வீட்டிலிருந்து ஏமாற்றி அகற்றிச் சென்றதாக அவ்வூர் 1. சாவிதுபெண் றோசம்மா 2 தாவீது 3. பத்தியநாதன் 4 பஸ்தியாம்பிள்ளை 5. சின்னத்துரை ஆகியவர்களைக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்குத் திருபடவும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. திறேசம்மாவைக் குறுக்குவிசாரணை செய்தபோது அவள் கூறியதாவது:—

"நான் பொலிஸ்டேசனுக்குச் செல்லுமுன் சார்சன் திசநாயக்காவின் வீட்டிலும் எதிர்கள் வீட்டிலும் வந்ததைக் கண்டேன். எதிரிகள் என்று நான் கூறினது றோசேமரியாவின் வீடுதான். நான் அப்போது வாக்கு மூலம் கொடுத்தேன் ஆனால் சின்னத்துரையின் பேரைக் கூறவில்லை. திரும்ப நான் பொலிஸ் டேசனுக்குப் போய் எனது வாக்கு மூலத்தைக் கூறினேன். அப்போதும் நான் சின்னத்துரையின் பேரைச் சொல்லவில்லை. இவைகளின் பின்புதான் என்னைக் கோட்டில் விசாரித்தார்கள். அப்பொழுது தான் நான் சின்னத்துரையின் பேரைக் கூறினேன் இப்படிச் சொல்லச் சொல்லி றோசைமரியாய எனக்குச் சொல்லித் தந்தார்; ஆகையால் தான் நான் அப்படிச் சொன்னேன நான் சின்னத்துரையைக் காரில் போகும்போது காரிற் காணவில்லை. இச்சம்பவம் நடந்த அடுத்தநாட் காலையில் தான் பரியை எனக்கு இப்படிச் சொல்லித் தந்தார். இப்படி அவர் எனக்குச் சொல்லித் தராவிட்டால் நான் சின்னத்துரையின் பேரை சொல்லி இருக்கமாட்டேன. இதற்கு முன்னும் எனக்குச் சின்னத்துரை என்பவரைத் தெரியும். அவருக்குப் எங்களுடைய ஆட்களுக்கும் ஒரு விரோதமும் கிடையாது 1-ம் 2-ம் எதிரிகள் தான் என்னை பஸ்தியாம்பிள்ளை வீட்டுக்குக் கூட்டிச் சென்றனர். இதன் பிற்பாடு தான் 3 4-5-ம் எதிரிகள் என்னைப் பண்டியதரிப்பில் வசிக்கும் ஆறுமுகத்தின் வீட்டுக்குக் கொண்டு போனார்கள்.

யோவான்-சந்தியா, அந்தோனி றோசைமரியை ஆகியவர்கள் சாட்சியம் கூறியபின் வழக்கு 26-ந் தேதிக்கெனத் தவணையிடப்பட்டது.

### கத்தியால் வெட்டியதாக

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் சென்ற 12-5-36 செவ்வாய்க்கிழமை கோண்டாவிலில் வசிக்கும் கணபதி கதிரவேலன் என்பவன் அவ்வூர் கதிரன் கந்தன் என்னும் புகைதப் பகுதிக் கூலி ஒருவனைச் சென்ற 8 ந் தேதி இரவு 8 மணியளவில் அவனுடைய வீட்டுக்குச் சென்று அழைத்து அவனை ஓர் கோப்பிக் கத்தியால் முதுகிற் காயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

கதிரன் கந்தன் என்பவன் கூறியதாவது:—

சென்ற 6-ம் திகதி இரவு 8 மணியளவில் எதிரி என் வீட்டுக்குவந்து என்னை அழைத்தார். நான் அந்த நேரத்தில் எனது வீட்டிற் படுத்து நித்திரை செய்தேன். இதன் பின்னர், அருகாமையில் வந்து அது யார் அங்கே படுத்திருக்கிறது? என்று கேட்டார், 'நான்தான்' என மறுமொழி சொன்னேன் அவன் உனக்கு மெத்த அதிகமான இனசனத்தவர்கள் உண்டோ என்று கேட்டான். நான் இல்லை என்று சொனனேன் அவன் போய் "உனது இனசனத்தவரிற் சிலரைக் கூட்டி வா" என்று சொல்லிவிட்டு எனது தலைமயிரைப்பிடித்து இழுத்து முதுகில் ஒரு கோப்பிக்கத்தியால் வெட்டிவிட்டு ஓடினன் நான் இச்சம்பவத்தை விதானையாருக்கு அறிவித்தேன். வழக்கு விசாரணைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

### கிறிஸாற் குற்றியதாக

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் சென்ற 13-5-36 புதன்கிழமை மானிப்பாய் பொலிஸ் விதானை அவ்வூர் (1) கிஞசி சின்னவன் (2) சுதுமலையில் வசிக்கும் குட்டியன் வயிரமுத்தன், (3) மாப்பாணி வயிரவன் ஆகியவர்கள் 10-5-36ல் 5 மணி (சாயந்தரம்) மானிப்பாயில் வசிக்கும் செல்லப்பா கந்தையா என்பவனை 1-ம் எதிரி ஓர் கிறிசால் கையிலும் ஓர் பொல்லால் தலையிலும் காயமுண்டாக்கியதாகவும் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடர்ந்தார். வழக்கு 23-5-36 விசாரணைக்குத் தவணையிடப்பட்டது.

### பொல்லால் அடித்ததாக

சென்ற 13-5-36 புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் புத்தூரில் வசிக்கும் (1) கதிரன் முருகன் (2) வாரி வல்லி, (3) நீலன் கணபதி, (4) தம்பையன் முத்தான், (5) சின்னவன் கிட்ணன் ஆகியவர்கள் புத்தூர் வைரசி இல்லையன் என்பவனுக்குப் பொல்லால் அடித்துக் காயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டி விதானையார் வழக்குத் தொடர்ந்தார் வழக்கு ஆனி௴ 2-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

## விதானையோடு சேட்டையா?

ஆனைக்கோட்டை விதானையோடு சிலர் சேட்டை செய்ததாகச் சென்ற இதழில் வெளியிடப்பட்டிருந்தது. இப்போது இன்னும் சில செய்திகள் தெரியக்கூடியதாக இருக்கின்றன. நாகமணி இளையதம்பி, சிதம்பரநாதர் நவரத்தினம் என்னும் இருவரும் அதிப் கலந்து கொண்டதாகவும், அதன்பேரில் விதானை பொலிஸாரிடம் சென்று அவர்களில் வழக்குத்தொடரும்படி கேட்க, அவர்களும் வழக்குத்தொடர்தற்கு மறுத்துவிட, ஈற்றில் விதானையார் கவர்ன்மெண்ட் ஏஜெண்டுக்குப் பெட்டிசம் அனுப்பியிருக்கின்றார். —கடிதம்

### இலங்கை அரசரின் முடியும் சிம்மாசனமும்.

பழைய இலங்கையரசரின் முடியும் சிம்மாசனமும் அடுத்த மாசம் கொழும்பு நூதனப் பொருட்சாலையில் எவரும் பார்க்கும்படி கண்ணாடிக் கூட்டில் வைத்துக் காட்டப்படுமாம்.

## இன்ஸ்பெக்டரும் சார்ஜனும் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று அதிகாலை 4 மணியளவில் சாவகச்சேரிப் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கானும் ஒரு பொலிஸ் சார்ஜனும் கொடிகாமம் வரணி ரோட்டு வழியாக மோட்டார்ச்சயிக்கிளிற் போகும்போது ஒரு விபத்துக்குள்ளானார்கள்.

இவர்கள்விழுந்த இடத்தில் ரோட்டுப் பள்ளமாக வெட்டப்பட்டிருந்ததாம். பக்கத்தில் அபாயத்தை அறிவிக்கும் சிவப்புக்கொடிகள் கட்டப்பட்டிருக்கவில்லையாம் இதனாலேயே மேற்படி விபத்து நேரிட்டது எனக் கூறப்படுகிறது. விபத்துக்குள்ளாகிய இன்ஸ்பெக்டரும் சார்ஜன் காயரும் தோளிலும் காலிலும் காயமுற்றவராய்த் தற்போது யாழ்ப்பாணம்சிவில் ஆஸ்பத்திரியில் இருந்து வருகிறார்கள். இவர்கள் ஒரு பாதகஞ்சாவைத்திருக்கிறார் எனக் கேள்விப்பட்டு அதனைப் பரிசோதனைசெய்யச் சென்றவிடத்திலேயே இவ்விபத்து நேர்ந்ததாம்.

## இது வாய்க்குமா?

'சீதனம் கொடுத்தலும் வாங்குதலும் சட்ட விரோதமாகும்" என்ற ஒரு பிரேரணையை, கொழும்புத் தெற்குப் பிரதிநிதியாகிய டக்ரர் A. P. டி சொய்ஸா நேற்றுக் கூடிய அரசாங்கசபைக் கூட்டத்தில் நிகழ்த்தியுள்ளார்.

### தேசாதிபதியின் மகனுக்கு விவாகம்

இலங்கைத் தேசாதிபதியாக இப்பொழுது இருக்கும் ஸேர் ஸ்ரப்ஸ் அவர்களுடைய சிரேஷ்ட குமாரனாகிய மிஸ்ரர் வில்லியம் எட்வேர்ட் ஸ்ரப்ஸ் அவர்களுக்கும் மிஸ் மேரி மோர்வெற் வில்ஸ் என்னும் கன்னிகைக்கும் சென்றசெவ்வாய்க்கிழமை (12-5-36) நுவரெலியாவில் விவாகம் அதிக ஆடம்பரமின்றி நடைபெற்றது. தம்பதிகள் தேற்றைத்தினம் கொழும்புக்கு மீண்டுவந்து அங்கே இராணியாளிகையில் உபசரணை கொண்டாட்டம் நடத்தியபின் நேற்று மாலையில் அங்கிருந்து இங்கிலாந்திற்குப் புறப்படலாயினர்; தம்பதிகள் இனிது வாழ்க

## மர மனிதனா?

### சிறிதுசிறிதாக வளரும் சிரம்!

### கண்கள், காதுகள் வளரும் அதிசயம்.

ஜல்பைகுரி, மே 7—

இந்நகரை யடுத்தாற்போலுள்ள பகாபூர் கிராமத்தில் ஒரு அதிசயமிருக்கின்றது. இதன் சாதில் ஏதோ ஒன்று புதிதாகப் புறப்பட்டு வளர்ந்துவருகிறது. இது கொஞ்சங் கொஞ்சமாக மனிதனது தலையைப் போன்ற சொரூபத்தைப் பெற்றுவருகிறது. இந்த அதிசயத்தைக் காண்பதற்காக ஜனங்கள் நூற்றுக்கணக்காக இக்கிராமத்திற்கு வருகின்றனர்.

இந்த அதிசய வளர்ச்சி தற்போது பூர்த்திபெற்று விட்டது. இதில் கண்களும், காதுகளும் பற்களும் காணப்படுகின்றன. இவை பார்வைக்கு மனிதரது கண்கள், காதுகள், பற்களைப்போன்று காணப்படுகின்றன. பக்கத்துக் கிராமவாசிகள் இதற்குள் இந்த அதிசயமரத்திற்கு பூஜை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.—அ. பி,

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரிய கலாசாலைப் பிரவேசம்

யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரிய கலாசாலையிற் சேரவிரும்புவோர் அடுத்த ஆனி௴ 30-ந் தேதியின் முன் விண்ணப்பஞ் செய்யவேண்டும். விண்ணப்பப்பத்திரங்களும் வேறுவிவரங்களும் கலாசாலை அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

எல். மெட்டி ஜெரீசன்
பதில் வித்தியாதிகாரி

1936-ம் ஆண்டு சித்திரை௴ 29-ந் தேதி
G 16, 14 & 28-5-36

# இற்றலி—அபிஸீனிய செய்திகள்

### இத்தலியர் 50 சாதியினரை மதித்திலர் ஆதலால் சர்வதேசசங்கத்தில் அவரை சேர்க்கவொண்ணாது

"எழைகளைக் கொன்ற பழியோடு கூடிய இரத்தக்கறை பொருந்திய வாட்படையுடன் இத்தலியர் வெட்கமின்றி இப்பொழுது வெற்றியும் சமாதானமும் பேசிக்கொண்டுபழையபடி சர்வதேசசங்கத்திற் சேர வருகின்றனர்; இந்தச் சர்வதேச சங்கமோஉலகிலுள்ள 50 சாதியினர் அனுப்பிய பிரதிநிதிகளைக் கொண்டது; அவர்களுடைய சொல்லை இற்றலியர் சிறிதும் பொருட்படுத்தவில்லை; இத்தலியரால் அவமதிக்கப்பட்ட சர்வதேச சங்கத்தார் இனிமேல் அவர்களைத் தம் சங்கத்திலே ஏற்றுக்கொள்ளலாகாது" என்று அபிஸீனியபிரதிநிதியாகிய மிஸ்ரர் உவால்டி மாரியம் என்பவர்தனட கூறுகிறார்.

### இத்தலிய பிரதிநிதி சர்வதேசசங்கத்தில்.

இத்தலியபிரதிநிதியாகிய பாரன் அலோயிஸி யென்பவர் சர்வதேசசங்கக் கூட்டத்திற்குச்சென்றபோது அக்கூட்டத்தில் அபிஸீனியபிரதிநிதியாகிய உவால்டிமாரியம் என்பவர் இருப்பக்கண்டு 'அபிஸீனியாவின் போலிப்பிரதிநிதி இங்குச் சமுகமாக இருப்பதை நான் பொறுக்கமாட்டேன்; அபிஸீனியாவுக்கு அதிகாரிகள் இத்தலியர் மாத்திரந்தான்; அபிஸீனியாவைப்பற்றி இனிமேல் இங்கு ஏதும் பேசுவதிற் பயனில்லை" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார். ஆனல் சர்வதேச சங்கத்தார் அபிஸீனிய பிரதிநிதியை புறக்கணிக்கவில்லையாம்.

### சர்வதேசசங்கத்திற்குப் பணம் அனுப்பவொண்ணாது

சென்றவாரம் ஸிம்லாவிற் கூடிய சட்டசபைக் கூட்டத்தில் சித்தூர்ப் பிரதிநிதியாகிய ஸ்ரீ அநந்தசயன ஐயங்கார் பின்வருமாறு ஆட்சேபித்தனர்:-

"அபிஸீனியா விஷயத்தில் சர்வதேசசங்கமானது அந்த அபிஸீனியாவுக்குத் துணைசெய்யாது விட்டதோடு அமையாது, துணைபுரிவோம் என்று சொல்லி ஏமாற்றி அபிஸீனியரைக் கெடுத்துவிட்டபடியால், அச்சங்கத்திற்கு நாம் வருடந்தோறும் அனுப்பும் பணத்தை இனிமேல் அனுப்பவொண்ணாது."

### நச்சுப்புகையே எங்கள் நாட்டை முடித்தது

ஜெறுசலேம் 10 5-36

பத்திரிகை நிருபர் அபிஸீனிய சக்கரவர்த்தியைச் சந்தித்துச் சில கேள்விகளை வினவியபோது "பகைவர் இட்ட நச்சுப்புகை வெடிகுண்டுகளுக்குக் கீழ் எதிர்த்துநின்று யுத்தஞ் செய்யமுடியவில்லை; நச்சுப்புகையே எங்கள் நாட்டுக்கு முடிவுதேடியது" எனச் சொன்னாராம்

### வென்ற சேனாதிபதியே முதற் பிரதிகாவலர்

11-5-36

இத்தலிய அபிஸீனிய யுத்தத்தை நடத்தி வெற்றிபெற்ற சேனாதிபதியாகிய மார்ஷல் படக்லியோ அபிஸீனிய பிரதி காவலராக இத்தலிய அரசினரால் நியமிக்கப்பட்டார்.

### அரசர் சக்கரவர்த்தியாக மாறினார்

இத்தலிய அரசர் என்ற பட்டத்தோடு இதுகாறும் இருந்த விக்ரர் இமானுவல் இப்பொழுது அபிஸீனிய சக்கரவர்த்திஎன்ற பட்டம் பெற்றார்.

12—5—36.

"பகைவர்கள் எனது ராச்சியத்திலுள்ள சனங்களைக் கொன்று அவர்களுக்குரிய பொருள்பண்டங்களையெல்லாம் சிதைவுசெய்யத்தலைப்பட்டனர்; அவற்றைத்தவிர்ப்பதற்காகவே நான் நாட்டைவிட்டு அகன்றேன்" என்று அபிஸீனியசக்கரவர்த்தி தெரிவிக்கிறார்.

### இத்தலியப்பிரதிநிதி சர்வதேச சங்கத்தை விட்டகன்றார்.

"இத்தலிய—அபிஸீனிய விவகாரத்தைப்பற்றி இனிமேல் இக்கூட்டத்தில் ஏதும் பேசுவதற்கு இடமில்லை; அபிஸீனியா இத்தலியருக்குச் சொந்தமாய்விட்டது, அபிஸீனியப் பிரதிநிதி இக்கூட்டத்திற் சமுகஞ்செய்ய வேண்டியதில்லை." என்று இத்தலிய பிரதிநிதியாகிய பாரன் அலோயிஸி சொன்னதை மேற்படி கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளவில்லையென்பதை இத்தலியிலுள்ள அதிகாரிகள் அறிவித்து இத்தலியப்பிரதிநிதியை அச்சபையினின்றும் விலகிவிடும்படி தெரிவிக்க அவர் தம்முடைய கூட்டத்தவருடன் அச்சங்கத்தை விட்டகன்றார்.

### பிருத்தானியர் அபிசீனியாவை விட்டுப்போய் விடவேண்டுமோம்.

பிருத்தானிய செஞ்சிலுவைப் பணியாளர் அடிஸ் அபாபாவை விட்டுப்போய்விடவேண்டுமென்று இத்தலிய அதிகாரிகள் கட்டளையிட்டனர்; அப் பணியாளர் கூட்டத்தலைவர்பட்டினத்தை விட்டுவிடுவதற்கு 15-நாள் அவதிகேட்டிருக்கிறாராம். குறித்த பணியாளர் ஆற்றிவந்ததொண்டை இனி இத்தாலியரே செய்வார்களாம்.

இத்தலியர் தாம் அபிஸீனியாவிற் பெற்ற வெற்றியையும் அத்தேசத்தை இத்தலிய ராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டதையும் உத்தியோகமுறையில் பிருத்தானியருக்குத்தெரிவித்தனர். ஆனல்பிருத்தானியர் அதனை ஏற்றுக்கொள்ளாது லண்டன் நகரில் இருக்கும் அபிஸீனிய பிரதிநிதியைச் சக்கரவர்த்தியின பிரதிநிதியாகவே மதித்து வருகின்றனர்.

# ஆஸ்பத்திரி அதிகாரிகளின் பாராமுகம்?

## உரும்பராய்க் கலகத்திற் காயமுற்றவர் ஆஸபத்திரியில் மாண்டார்.

(நமது நிருபர்)

சென்ற 12-5-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் தரும ஆஸ்பத்திரியில் பொலிஸ் நீதிபதி முன்னிலையில் உரும்பராயில் வசிக்கும் முருகேசு கந்தையா என்பவருக்குக் கத்தியால் படுகாயம் வருவித்ததாயும் அப்புத்துரைக்குப் பொல்லால் அடித்துக் காயமுண்டாக்கியதாயும் அவ்வூர் (1) V. சின்னத்துரை, (2) T அரியம், (3) V சோமு, (4) A. சின்னப்பு, (5) T இராசையா ஆகிய இவர்கள்மீது குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கிற் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில மரணமடைந்தார். இதனால் மேற்படி எதிரிகள் கொலைக்குற்றவாளிகள் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றனர் என அறியக்கிடக்கின்றது.

இறந்தவர் சிலகாலம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலிருந்தார். அங்கு ஆஸ்பத்திரி அதிகாரிகள் யாது காரணம் பற்றியோ அவரை ஆஸ்பத்திரியினின்றும் நீக்கிவிட்டதாகத் தெரிகிறது. இவ்வாறு நீக்கப்பட்டவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே பரீக்ஷை செய்யப்பட்டபோது அவருக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டிருக்கக் காணப்பட்டனவாம். இதனால் இவர் சிகிச்சை பெறுதற்காக காயன்ஸ்ராட்டு ஆஸ்பத்திரியிலிருந்தாரென்றும் அங்கும் சுகம் பெறாமல் மீளவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை அடைந்து பணங்கொடுக்கும் வார்டிலிருந்து வைத்தியஞ் செய்வித்து அங்கிருந்தே இறந்துபோனார் என்றும் தெரியவருகின்றது.

# உலகம் பலவிதம்.

தன்னுடைய கட்டழகால் தனக்கு எந்த கஷ்டத்தைப்பற்றி ஒரு அயிரோப்பிய கன்னிகை பின்வருமாறு வெளியிட்டுக் கவலைப்படுகின்றாள்; அவளுடைய பெயர் அன்னிமெயிஸ்; "எனக்கு நான் அதிகம் அழகுடையவள் போலத் தோற்றவில்லை! ஆனால் ஆடவர் அவருள்ளும் வாலிபர் பலரும் என்பாலார் சிலரும் என்னைக் கட்டழகியென்று சொல்ல நான் சாதாரக்கேட்டும் கேள்விப்பட்டுமிருக்கிறேன்; அந்தச் சமையங்களில் எனக்குச் சிறிது சந்தோஷமும் உண்டாவதுமெய்; ஆனால் என் பொழுது நான் பிழைக்கும் பிழைப்புகளெல்லாவற்றிற்கும் பெரும் இடையூறுயிருக்கிறதே என்பதை நினைக்க நினைக்க என்னிடத்திலே எனக்கு வெறுப்பு உண்டாகின்றது நான் இன்னமும் கன்னிகையாகத்தான் இருக்கின்றேன்; என்னுடைய இந்தச் சின்னவயசில் நான் பார்த்த தொழில்கள் மிகப்பல. நான் வியாபார சமுதாயங்களிலே "கிளார்க்"காக இருந்தேன்; கணக்குப் பார்ப்பவளாக இருந்தேன்; விற்பனவு காரியாக இருந்தேன்; காரியதரிசியாகவிருந்தேன்; இன்னும்பல பதவிகளில் இருந்தேன்; ஆனால் ஒரு பதவியிலேனும் ஒரு சமுதாயத்திலேனும் நான் நிலையாகஇருந்ததில்லை.

* * *

நான் பார்த்த கடமையில் நான் பிழைவிட்டதுமில்லை; தவறிட்டதுமில்லை; நேர்மை குன்றியதுமில்லை; இவைகளில்லாதொழியவும் எந்த உத்தியோகத்திலாயினும் இவள் என்கின்ற பிடிக்கவில்லையென்பதையிட்டு, நீங்கள் யாரேனுஞ் சிந்திக்கக் கூடும். காரணத்தை நானே சொல்லிவிடுகிறேன்; சில மாசங்களாக ஒரு வியாபார சமுதாயத்தில் நான் எழுத்துவேலைபார்த்துக்கொண்டிருந்தேன்; ஒருநாள் அந்தச்சமுதாயத்தின் மனேஜர் எனக்கு ஒருமாச வேதனத்தை முற்பணமாகத் தந்து உடனே வேலையையும் விடும்படி எனக்குக் கட்டளையிட்டார் என்னை இப்படி விடுவதற்கு அவர் எதும் நியாயஞ் சொன்னால்லர். பிறகுதான் காரணம் என்னவென்று நான் அறிந்தேன்; காரணம் வேறொன்றுமல்ல; எனக்கு மேலான உத்தியோகத்தில் இருப்பவருடைய முன்னிலையிலே தான் நான் இருந்து என் கடமையைப் பார்க்க நேர்ந்தது. அவர் ஒரு வாலிபர்; அரோக. திடகாத்திரமும் அழகும் வாய்ந்தவர்; இதமாகப் பேசும் இயல்புடையவர்; அவர் இடையிடையே என்னை ஆர்வத்தோடு பார்ப்பதையும், என்னுடன் அன்பாகப் பேசுவதையும், நான் தமக்குக் கீழ்ப்பட்ட பதவியில் உள்ளவளென்பதை அவர் அறிதிருந்தும் என்னுடன் மிக்க விநயமாக நடந்துகொள்வதையும் அவரறியாதபடி நான் அவதானித்து வந்தேன்; அவ்வாலிபர் என்னுடன் ஊடாடும்விதமாக நானும் அவருடன் ஆதரத்தோடு ஊடாட வேண்டுமென்ற எண்ணம் என்மனத்தில் எழுந்ததேயல்லாமல் அவரை வெறுத்தற்கு மனம் எழவில்லை; அந்த வாலிபர் என்னுடன் நடந்து கொள்ளும் விதத்தையும் நான் அவர்மீது கொண்டுள்ள விருப்பையும் அவரேனும் வேறு எவரேனும் கண்டுபிடியாத வண்ணம் கெட்டித்தனமாக நடந்துவந்தேன்.

* * *

ஆனால் அவரும் நானும் அதிசமீபத்திற் சந்திக்க நேர்ந்த சமையங்களில் பரஸ்பரஞ் செய்துகொண்ட புன்னகை எங்கள் இருவருக்குமிடையே உள்ள அன்பைப் பிறருக்குக் காட்டிவிட்டது போலும். நமது அன்பர் தமது கடமையைத் திறமையோடு பார்ப்பவர்; சமுதாய முதலாளியினால் பெரிதும் மதிக்கப்படுபவர்; இப்படிப்பட்டவர் நான் அந்தச் சமுதாயத்திலே போய்ச் சேர்ந்து கடமைபார்க்கத்தொடங்கிச் சிலநாட் செல்ல, தமது எழுத்து விஷயங்களிற் பிழைவிடுதலையும், கடமையில் முக்கிய ஆர்வம் இல்லாமையையும் சமுதாயமுதலாளி அவதானித்துக் கொண்டு இதற்குக்காரணம என்ன என்று ஆலோசித்தாராம். ஈற்றில நானே அவருடைய கேட்டிற்குக் காரணி எனறு அவர் அயிர்த்துக் கொண்டு என்னை வேலையினின்று விலகும்படி சொன்னார். குற்றவாளி அந்த வாலிபராயிருக்க, பாவம்! என்னை ஏன் வேலையிலிருந்து விலக்குவான் என்று ஆராய்ந்தவிடத்தில் அவரை வேலையிலிருந்து விலக்கினால் வியாபார சமுதாயத்திற்கு கஷ்டம் வருமென முதலாளி சொன்னாராம். இங்கே பிழைப்பைக்கெடுத்தது என் பேரழகுதானே!

* * *

இனி, இன்னுமொரு இடத்தில் என் வேலையை நானேகைவிடவேண்டி ஏற்பட்ட காரணத்தைச் சொல்லுகிறேன்; நான் உத்தியோகம் பார்க்கும் தானத்தில், என்னுடையபொல்லாத காலத்தினாற் போலும், வேறுமொருவர் கிளார்க் வேலைசெய்துகொண்டிருந்தார்; அவருக்கருகும் சமீபத்திற்றான் இருந்து கடமைபார்க்க வேண்டியது; அவர் அவலட்சணமானவர்; வடசு சென்றவர்; ஆனாலும் தம்முடைய நிலைமையை மறந்து அவர் என்னையே பாதாதிகேசபரியந்தம் சதா உற்றுப்பார்ப்பதும், சையிக்கை செய்வதும், புன்னகை புரிவதும், ஏதுமொரு காரணங் காட்டிக்கொண்டு என்னுடன் வந்து அடிக்கடி வார்த்தையாடுவதுமாக இருந்தார். நான் ஆரம்பத்தில் அவர் நோக்கத்தை விளங்கியும் விளங்காதவள் போன்று நடந்து பார்த்தேன்; அதனை அவர் விபரீதமாக விளங்கிப்போலும் பின்னரும் அப்படியே நடக்கத் தலைப்பட்டார்; நான் அவருடன் சிறிது வெறுப்புக் காட்டி நடந்தேன்; நான் எவ்வளவு வெறுப்புக்காட்டி நடந்தேனோ அவர் அவ்வளவு அன்புகாட்டி நடக்கத் தலைப்பட்டார்; அவரைக் கழற்றிக் கொள்ள என்னால் முடியவில்லை; அதனால் நானே உத்தியோகத்தை விட்டுவிலக நேர்ந்தது.

* * *

இவைகளெல்லாம் சங்கடமென்று எண்ணி ஒரு சமுதாய முதலாளியின மனைவியின் கீழ் உத்தியோகம் பார்த்து வந்தேன்; அந்த அம்மாள் ஆரம்பத்தில் என்மீது நம்பிக்கையு மதிப்பும் பாராட்டி நடந்துவந்தாள் முதலாளியின் மனைவி நடத்தும் கருமத்தை இடையிடையே முதலாளியும் வந்து பரிசோதித்துப் பார்த்த வருவதுண்டு; ஆனால் நான் அங்கே சேர்ந்து சிலநாட் செல்ல முதலாளி முந்தி இடையிடையே வந்தவர் பின்பு நாள்தோறும் அங்கே வரத் தலைப்பட்டார்; அது மாத்திரமல்லாமல் நான் செய்யும் வேலைகளை அந்த முதலாளி விசேஷமாக அவதானிக்கத் தலைப்பட்டார். எஜமாட்டியைக் காட்டிலும் என்னுடன்தான் அதிகம் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளத் தொடங்கினார்; என்மீது மதிப்பும் பாராட்டினார்; அவர் வைத்த விசேஷ அவதானமும் மதிப்பும் எனக்கு அவமதிப்பாகவே முடியலாயின. எஜமாட்டிக்கு என்னிடத்திற் பொறாமையும் தன் புருஷனிடத்திற் சந்தேகமும் தோன்றலாயின. ஒருநாள் நான் காத்திராத பிரகாரம எனக்குப் பதிலாக அழகு குறைந்த இன்னுமொருபெண்ணை எஜமாட்டி நியமித்துவிட்டு எனக்கு ஒருமாசவேதனத்தையும இனமாகவே தந்து நன்றியறிதல் கூறி என்னை வெளியே அனுப்பிவிட்டாள். இப்பொழுது நான எவ்வகையான முயற்சியுமின்றி இருக்கின்றேன்."

* * *

இக்கன்னிகையின் வரலாறு பரிதாபமானதுதான்; ஆனாலும் இப்பெண் தனக்குவாய்த்த ஒரு ஆடவனை மணந்துகொண்டு வாழ்வாளேல் மேலே சொல்லப்பட்ட கஷ்டங்கள் முழுவதும் அந்த ஆடவனிடம சேர்ந்துவிட இவள் ஆறுதலாக இருக்கலாமென்பதே முருகேசு சொல்லக்கூடிய உபாயமாகும்.

## சப்த சிசு ஜனனம்

மனகுவா, மே 9உ

இந்து போசோ அஸன் என்னும் குடும்பத்திற்கு ஒரே பிரசவத்தில் 4 பெண்குழந்தைகளும் மூன்று ஆண குழந்தைகளும் பிறந்தனவாம் இவற்றில் 4 குழந்தைகள் இறந்துவிட்டனவாம். எஞ்சிய இரு பெண குழந்தைகளும ஒரு ஆண குழந்தையும அபாயகரமான நிலையில் இருக்கின்றனவாம்.

# செய்தித்திரட்டு

## சர்வமதசங்கத்திற்கு ஆசி.

### மகாத்மாவும் கவிதாகூரும் அனுப்பிய செய்திகள்

பம்பாய் மே 7

இன்று ஸர் கவாஸ்ஜி ஜிஹாங்கிர் ஹாலில் ஸர் ஸி ராதாகிருஷ்ணரின் தலைமையின் கீழ் சர்வமத மகாநாடு ஆரம்பமாயிற்று. ஸ்ரீராமகிருஷ்ணரின் சதாப்த விழாவை ஒட்டி இம் மகாநாடு கூட்டப்பட்டது.

நற்செய்திகள்

"மகாநாடு வெற்றிகரமாக முடியுமென்று நம்புகிறேன். எனக்கு எல்லா மதங்களும் ஒன்று தான்" என மகாத்மாகாந்தி மகாநாட்டுக்கு நற் செய்தி அனுப்பியிருக்கிறார்.

கவி தாகூர் பின்வரும் நற்செய்தியை அனுப்பயுள்ளார்:—

"நாம் பெரியோர்கள் ஜனித்த உலகத்தில் வாழ்கிறோமென்பதை இம மாதிரிக்காலங்களில் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும. அவர்களுடைய சம்பந்தமிருக்கிறதென்ற உணர்ச்சியால் நாம் பெருமையடைந்தவர்களாகிறோம்."

தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் அடிப்படையான கொள்கைகள் சம்பந்தப்பட்டவரையில் உலகத்திலுள்ள எல்லா மதங்களுடைய அபிப்பிராயங்களும் ஒன்றுதானென்றும இதரமதங்களிடை விரோதபாவமில்லாதிருப்பதே எல்லா மதங்களுடைய முக்கிய நோக்கமாக விருக்கவேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவன் தனனை அனுகும மார்க்கத்தை ஒவ்வோர் மதத்துக்கும் வெவ்வேறு வழியில் காட்டியிருக்கிறானேயொழிய வேறல்லவென்றும் கூறினர்.

## கமலாநேருவின் ஆவியின் ஜோதிஷம்.

### 6வருஷங்களில் இந்தியா சுதந்திரமடையுமாம்.

ஜலந்தர் மே 8

இவ்வூரிலுள்ள ஒரு ஜோஷ்யர் காலஞ்சென்ற ஸ்ரீமதி கமலா நேருவுடன் சம்பாஷித்தனராம். அப்போது கமலாநேருவின் ஆத்மாவினிடமிருந்து அடியிற் கண்ட செய்தி கிடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது:-

"6 வருஷங்களில் இந்தியா சுதந்திரமடையும். அபேதவாதமே தலைசிறந்து விளங்கும். வரப்போகும் தேர்தலின் போது பண்டித ஜவஹர்லால் சிறையிலிருப்பார். ஆனால் ஓராண்டுக்குள் சுபாஷ் சந்திரபோஸ் விடுதலையடைவார்."—யு.பி

## 52 இரட்டைக் குழந்தைகள்

### நௌரோஸ்ஜீ வாடியா பிரஸவாஸ் பத்திரிகையில் பிறந்தன

பம்பாய் மே 5—

நௌரோஸ் ஜீவாடியா பிரசவாஸ் பத்திரிகையில் 31-12-35 யோடு முடிவடைந்த 3-வது வருடத்தில் 52 இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. 6144 பேர்கள் ஆஸ்பத்திரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 4654 பேர் பிரசவித்தனர். இவர்களில் ஆலைத் தொழிலாளர் தொகை 3211 ஆகும. அக்டோபரில் தான அதிகமாகக் குழந்தைகள் பிறந்தன அந்த மாதத்தில் 69 குழந்தைகள் பிறந்தன.


## அறிவித்தல்

### திருநெல்வேலி சைவாசிரியகலாசாலை பிரவேச பரீக்ஷை

மேற்படி கலாசாலையிற் சேர விரும்புகிறவர்கள், தமிழில் ஆசிரிய தராதர பத்திர பரீக்ஷையிலாதல், அப்பரீக்ஷையின் இரண்டாம் பகுதியிலாதல், ஆங்கிலத்தில் சீனியர் மற்றிக்குலேஷன் பரீக்ஷைகளிலாதல், அவற்றோடொத்த பரீக்ஷைகளிலாதல் சமிஞோர் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் வருகிற ஜூலாய்மீ 1ந் திகதிக்குமுன் பிறப்புப்பத்திரம நற்சாட்சிப்பங்களுடன் சைவலாசாலை அதிபருக்கு அனுப்பவேண்டும்.

நேர்முகப் பரீக்ஷை போதா அறிவுப் பரீக்ஷைகள் நடத்தி மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

சைவாசிரியகலாசாலை, திருநெல்வேலி. 14—5—36.

சி. சுவாமிநாதன், அதிபர்.

(Mis- 32. 14 & 21-5-36)


# கடிதங்கள்.

பத்திரிகாசிரியரவர்கட்கு,

ஐயா,

சித்திரைத் திங்களில் நடந்த சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரிக்ஷையில், ஆரம்பகணிதக் கேள்விப் பத்திரத்தில் பின்வரும் கேள்வியுள்ளது:—

(6) "400 யார் நீளமுள்ள ஓர் நேர்ப்பாதையில் A, B என்பன இரு புள்ளிகள். A யிலிருந்து 350 யார் தூரத்திலும், B யிலிருந்து 200 யார் தூரத்திலும், C என்னும் சிறு வீடு இருக்கின்றது. இவ்வீடு பாதைக்கு மிகக்கிட்டிய இடத்திலிருந்து எவ்வளவு தூரத்திலுள்ளது என்பதை ஒரு அளவைப்படம் (drawing to scale) வரைந்து காண்க."

இக்கணக்கில், நேர்ப்பாதையின் நீளம் 400 யாரெனக் குறிக்கப்பட்டிருக்கின்றதேயன்றி, A, B எனனும் புள்ளிகள் எத்தனை யாரை இடைவைத்த புள்ளிகளெனக் குறிக்கப்படவில்லை. ஆகையால், இப்புள்ளிகள் குறித்த நேர்ப்பாதையில் எங்கேனும் இருத்தல் கூடும். ஆயின், இக்கணக்குக்கு எண்ணில்லாத வேறு வேறான விடைகள் பரீக்ஷார்த்திகள் எழுதியிருக்கக்கூடும். இவையெல்லாம சரியெனவே பரிசோதகர் கொள்வது முறைமையாகும். அன்றித் தம மனத்திலுதித்த கருத்துக்கிணங்க விடைகண்டோருக்கு மாத்திரம் சரியெனக்கொள்ளின், பரிசோதகாது தமிழறிவின் குறைவால் பரீக்ஷார்த்திகள் பெரிதும் வருந்தவேண்டி நேரிடும். எனவே, இது அநீதியாக முடியும்.

இங்ஙனம்
பரீக்ஷார்த்தி

## கொழும்பு ஆடிவேல் உற்சவம்

இந்துசாதனப் பத்திரிகாசிரியர் அவர்களுக்கு.

ஐயா,

சென்ற ஆண்டு நடந்த கொழும்பு ஆடிவேல் உற்சவத்திற்கு நாம் சென்றிருந்தபோது நமது சமயத்திற்கு விரோதமான சில விஷயங்கள் நடந்ததைக்கண்டு உண்மையிலேயே வருத்தமடைந்தேம். வேண்டுவான் வேண்டுவதை ஈயும் அந்தப் பரம்பொருள் பம்பலப்பிட்டியில கொலுவீற்றிருக்குஞ் சமயத்தில் காலில் சப்பாத்தும் தோளில் உத்தரியமும் தரித்துப் பீடத்தின் இருமருங்கிலும் சிலர் நின்றதையும் அதனருகே பலர் உலாவியதையும், சிகரற், பீடி புகைத்தவண்ணம உட்சென்றதையும் கண்ட அன்பர்கள் மனம புண்படாதிருக்குமோ? கொழும்பு போன்ற நகரங்களில் இவைகளைத் தடுப்பது அசாத்தியமெனினும் இக்கோலத்தோடு ஆலயத்தினுட் புகவேனுமாயினும் தடுத்தற்குரிய வழிவகைகளைக் கையாளக்கூடாதா? வீதியினுள் கடைவைத்திருக்கும் சில காலடையர் தங்கள் அதிகாரத்தையும் செலுத்தப்பார்க்கின்றனர்.

வீதியின் பாதையினோரமாய்த் தேங்காய்களையும் வேறு சாமான்களையும் வைத்திருக்கிறார்கள். நெருக்கத்தின் மிகுதியால் ஓர் அன்பர் ஒரு தேங்காயைத் தட்டிவிட்டார். இதைக்கண்டதும்அச்சிங்களவருக்கு அடாகாக்கோபம் பொங்கியெழுந்து வாயில் வந்தபடி ஏசத்தொடங்கிவிட்டார். பொறுமையையே அணிகலனாய்ப் பூண்ட தமிழ் மக்கள் இந்த நேரத்தில் அவரோடு வாய்கொடுப்பது சரியல்ல வெனக்கண்டு, இத் தேங்காய்களைக் கொஞ்சம் அப்பால் வைத்திருந்தாலென்ன? அல்லது வெளியில் வைத்திருந்தாலென்ன என்று அங்கு நின்றவர்களில் ஒருவர் கேட்டதும், நான் வெளியிற்போகவேண்டிய அவசியமில்லை. நீ வெளியே போ என வியாபாரிமார் துடுக்காய்ப் பதிலிறுத்தார். இவ்வாலய அதிகாரிகளின் உத்தரவோடு வைத்திருக்கிறோம் என்னும் அகங்காரத்தினால் அப்படிச் சொன்னார்போலும். அந்தகோரம் தரிசனம செய்ய வந்தவர்களில் எவரேனும் பொறுமையை இழந்திருந்தால் கலகம் நடந்திருக்குமென்பது நிச்சயம். போராலேயேடு தரிசனஞ் செய்யவரும் பக்தர்களுக்கு இடையூறின்றிப் போதிய இடவசதியளித்து அதற்கப்பால் இக்கடைகளை வைத்திருக்கும்படி இவ்வாலய அதிகாரிகள் செய்தால் என்ன ஐயா கெட்டுப் போருமென்று கேட்கின்றேம். பாதையிலிருந்து பத்து பதினைந்து அடிக்கப்பாலும் இக்கடைகளை வைக்கப் போதிய இடமிருக்கிறதே. ஐயா இவ்வாண்டு நடக்கவிருக்கும் உற்சவத்தின்போதாவது இக் குறைகளைக் களைந்து ஆவன செய்ய இவ்வாலய அதிகாரிகள் முன் வருவார்களா?

இங்ஙனம்,
கா. செல்லையா,
சாவகச்சேரி.

## குருபூசையும் பிரசங்கமும்

வேலணைச் சிவபூசா மண்டபத்தில் நிகழும் சித்திரை மீ 21-ம்உ ஞாயிற்றுக்கிழமை பகல் சங்கராசிரியரில் ஒருவராகிய ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் குருபூசையும் இரவு 7 மணி தொடக்கம நடராஜ வித்தியாசாலையில் மேற்படி நாயனாரவர்களின் சரித்திரப் பிரசங்கமும் நடைபெற்றன

## வேலணைச் சைவப்பிரகாச சங்கம்

வேலணைச் சைவப்பிரகாச சங்கத்தின் பதினைந்தாவது வருடாந்தக் கூட்டம் நிகழும் தாது ஞு சித்திரை மீ 24ம் திகதி புதவாரம் சித்திராபூரணையன்று 7 மணியளவில் நடராஜ வித்தியாசாலையின் சங்க அக்கிராசனர் சித்தாந்த பண்டிதர் ஸ்ரீமத் கா. நமசிவாயப்பிள்ளை அவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ்நடைபெற்றது. அப்பொழுது முதலாவதாக சரவணை நாகேஸ்வரி வித்தியாலயப் பிரதமாசிரியரும் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமாக். இ. மருதையனார் அவர்களால் கூட்டத்தில் செய்யப்படவேண்டிய நிகழ்ச்சிகளைப் பற்றிச் சிறந்த குறிப்புக்கள் கூறப்பட்டன. பின் சங்க அறிக்கை வாசிக்கப்பெற்றுச் சர்வாங்கீகாரமாயின. அதன்பின் புதிய உத்தியோகத்தர்களடங்கிய நிர்வாக சபையினர் தெரிவுசெய்யப் பெற்றனர். பின் நடராஜவித்தியாசாலை ஸ்தாபகர் ஸ்ரீ செ. கனகசபாபதிப்பிள்ளை அவர்களும், சுருவில் ஸ்ரீ கோபாலபிள்ளையவர்களும், சரவணை சுதேச வைத்தியர் ஸ்ரீ வே. சோமசுந்தரம்பிள்ளை அவர்களும், பள்ளப்புலம் றெயில்வே பென்சனர் ஸ்ரீ வே. சுப்பிரமணியமவர்களும், குறிப்புக்கள் கூற அக்கிராசனரின் முடிவுரையோடு கூட்டம் முடிவெய்தியது.

முன்னும் பின்னும் அருட்பாக்களும் சிவநாமமும் ஓதப்பெற்றன.

## கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் ஆயுர்வேதவைத்தியசாலைகள்

கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் தனித்தனி ஒவ்வொரு ஆயுர்வேத ஆஸ்பத்திரியையும் டிஸ்பென்சரியையும் அமைக்கவேண்டும் என்னும் விஷயம் கொழும்பிலுள்ள சுதேச வைத்தியக் கல்லூரியை நடத்தும் நிர்வாக சபையினர் ஆலோசனைக்கு விடப்பட்டிருக்கிறது. இவ்வாரம் மேற்படி நிர்வாக சபை கூடும் போது இவ்விஷயத்தைப்பற்றி ஒரு முடிவு செய்யப்படுமாம்.

## யாழ்ப்பாணத்தில் சேர். அண்ணாமலைச்செட்டியார்

சென்ற வெள்ளிக்கிழமை காலையில் கௌரவ ராஜா சேர். அண்ணாமலைச் செட்டியார் தமது மனைவியோடும் புத்திரனோடும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அவரை டிஸ்திறிக் நீதிபதி திரு. சி. குமாரசுவாமியும் பாரியாரும், பல பிரமுகர்களும் ஸ்டேசனில் வரவேற்றனர். பின் சேர். அண்ணாமலைச்செட்டியார் அவர்களும் குடும்பத்தாரும் ஊர்காவற்றுறை, கீரிமலை, காங்கேசன்துறை, இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக்கல்லூரி, நல்லூர்க் கந்தசுவாமிகோவில் ஆதிய இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டபின் வயோதிபர் விடுதிச்சாலையும் இவர்களால் பார்வையிடப்பட்டது. பின் நீதிபதி திரு. குமாரசுவாமியவர்கள் வீட்டில் தேநீர் அருந்தியபின் அன்று மாலை மெயிலிலேயே இந்தியாவுக்குப் புறப்பட்டனர்.

# மாதர்மகா நாட்டுத் தலைமைப் பேருரை

1–ம் பக்கத் தொடர்ச்சி.

தட்டு முட்டு, பாய் முடைவது முதலிய யாவும் நம் புராதன குடிசைத் தொழில்கள் அல்லவா? அவற்றை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும். தேகாரோக்கியத்திற்கு முதன்மையானதும், சிக்கனத்துக்குச் சிறந்ததுமான சட்டி பானைகளை நாம் சில காலமாக நிராகரித்து விட்டுத் தேகாரோக்கியத்திற்குக் கெடுதலான அலுமினியம் முதலிய பாத்திரங்களை உபயோகப்படுத்துவதில் குயவர்களுக்குத்தொழில்விருத்தியும் வியாபாரமும் குறைந்தது.

மாதர் கல்வியின்மை

வெளிநாட்டில் நூற்றுக்குஎத்தனை பெண்கள் படிக்காதிருக்கிறார்களோ அத்தனைக்கு நம் நாட்டில படித்த வகுப்பினர் இல்லை. நம் நாட்டில் பாமரமக்களுக்கு அடியோடு கல்வி ஞானமே இல்லாமையால் தான் நம அடிமைத் தனத்தை எல்லோரும் அறிந்து கொள்ளக்கூட முடியவில்லை.

இனிமேலாவது அம்மாதிரியில்லாமல் கிராமந்தோறும் மாதர்சங்கம் ஸ்தாபித்து அதன் மூலமாக ஒற்றுமையுடன் சமூகத்திற்கும் சேவை செய்ய முன்னே வாருங்கள். சேவை செய்வது இழிவல்ல. சேவையின் மகிமையை இராமாயணம் பறை சாற்றுகின்றதை உணருங்கள்.

ஸ்திரீகளுக்கெனப் பிரத்தியேகமாக அளித்துள்ள இரண்டொரு ஸ்தானங்களிற் கூடத் தைரியமாக நிற்க வீரவனிதைகளில்லாது பல விடங்களில் தவிப்பது நமது பல ஹீனத்தையும் அவமானத்தையுங் காட்டவில்லையா? பொது ஸ்தாபனங்களிலும் ஸ்திரீகள் நின்று ஜெயிக்கும் சக்தியும் பெருமையும் நம்மிடம் ஏராளமாகவிருக்கையில் அதையும் நாம் அறியாமல் ஒரு ஸ்திரீ கூடக் கிடைக்கவில்லை எனகிற முறையில் நாம்நிழைப்பது வெட்கக்கேடல்லவா

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஜில்லா போர்டிலும், முனிஸிபாலிடியிலும் சட்டசபையிலும் பெண் மணிகள் கட்டாயம் இருக்க வேண்டும். ஆண்மக்களைவிடப் பெண்மக்கள் இந்த இடங்களில் இருந்து வெகு உபயோகமான வேலைகளை இயற்கையாகவே செய்ய முடியும்.

ஓட்டின் சக்தி

இந்தப் புதிய சட்டப்படிக்குள்ள ஓட்டுரிமையை நாம் பெருக்கிக் கொண்டு அதைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் உங்கள் ஒரு ஓட்டு சாமானியமென்று எண்ணி வீட்டினுள்ளேயே அடைபட்டுக் கிடக்க வேண்டாம். பல துளி பெருவெள்ளம். முதலிலேயே வெள்ளமாகத் தண்ணீர் பெருகாது. உங்கள் பலபேருடைய வாக்குகள் தான் ஒருவரைப் பெருமிதமான மதிப்புடன் உங்கள் பிரதிநிதியாகக் கண்ணியமாக அனுப்புகிறது. இந்த உரிமை எல்லோருக்கும் கிட்டாது. ஆகையினால் ஓட்டுரிமையுள்ள ஒவ்வொருவரும் போட்டியிட்டுக்காங்ரஸ் காரர்களுக்கு வாக்கைக் கொடுத்துக் காங்கிரஸின் பலத்தை அதிகப்படுத்தி விடுதலைக்கு உதவுங்கள் தேசத்தைக் காட்டிக் கொடுப்பவர்களையோ பசுத்தோல் போர்த்த புலி போன்றவர்களையோ நாம் ஏமாந்து அனுப்பிவிட்டால் கொள்ளிக் கட்டையால் தலையைச் சொறிந்து கொள்வது போலாகுமென்பதில் ஐயமேயில்லை. திருநெல்வேலி, வேலூர் ஜில்லா போர்டு தேர்தல்கள் இதற்குப் படிப்பினையாகும்.

காங்கிரஸின் பலம் அதிகரித்தால் தான் நமக்கு விடுதலையுண்டு. காங்கிரஸ் பலவீனப்பட்டால் நாம் என்றும் அடிமைகள் தான்

## மதிப்புரை.

தஞ்சைவாணன் கோவை:—
(சைவபரிபாலனசபைப் பதிப்பு)

இக்கோவை மூலமும் குன்றத்தூர் அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர் உரையும் வித்துவான் ந. சுப்பைய பிள்ளை அவர்கள் ஆராய்ச்சிக் குறிப்புக்களும் அடங்கிய இந்நூல் யாழ்ப்பாணச் சைவபரிபாலனசபையாரின் 46–வது வெளியீடாகும். நம்மிடமும் யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை – "இந்து சாதன" ஆபீசிலும் கிடைக்கும்.

அகப்பொருட்டுறைக்கு அருமணி விளக்காகிய செம்மைசால் இக்கோவை நூலுக்கு ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு கூடியதொரு விளக்கவுரை இல்லாமலிருந்தமை தமிழுக்கே ஒரு பெருங்குறையாகும். அக்குறையை மிகவும் முயன்று உழைத்து, வியந்து பாராட்டத்தக்க வகையில் நிரப்பி வைத்த இயற்றமிழ்ப் போதகாசிரியர் திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களின் போற்றல் பாராட்டற்பாற்று. ஆண்டிற் சிறியராயினும் அறிவில் முதிர்ந்தவராகிய இவ்வாசிரியர் இன்னும் பற்பல இலக்கிய நூல்களை இவ்வாறே செம்மை செய்து நிறம்படப் பதித்துதவுவார்கள் என நம்புகிறோம். பல பழைய ஏட்டுச் சுவடிகளைத்துருவியாராய்ந்து கண்ட விபத்தக்க குறிப்புக்கள் இந் நூலின்கண் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தருமபுர ஆதீன வித்துவசிகாமணி காழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் இந் நூலுக்கு ஓரலிக்கூவை பாடி புகவியுள்ளார்கள்.

செந்தமிழ்ச்செல்வி சிலம்பு 14-பக்கம் 398

தாய்ப்பாஷையில் பேசாவிடில் வார்த்தைக்குக் காலணா அபராதம்

உதகமண்டலம் இந்திய வாலிப ஒற்றுமைச் சங்கத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது:—

நம் தாய்ப்பாஷை, தமிழையும், ஹிந்தியையும் தவிர ஆங்கில வார்த்தைகளை இச்சங்கத்தில் பேசக் கூடாது. பேசினால் ஒவ்வொரு வார்த்தைக்கும் கால் அணா வீதம் அபராதம் விதிக்கப்படும்.

### விவாகம்

சுப்பிரமணியம்—மகேசவரி

கொழும்புத் திறைசேரியில் உத்தியோகம் வகித்திருக்கும் ஸ்ரீ. A. சுப்பிரமணியமவர்களுக்கும், மதுபரிபாலனப் பகுதி மேற்பார்வை உத்தியோகத்தராகக் கடமை பார்க்கும் ஸ்ரீ வை. நாகலிங்கமவர்களின் புத்திரி ஸ்ரீமதி. மகேசுவரி அம்மாளுக்கும் யாழ்ப்பாணப்பட்டினம் 5-ம் குறுக்குத்தெருவோரத்துள்ள "வேல் துணை" என்னும் மணமகளில்லத்தில் சென்ற வியாழக்கிழமை (7 - 5 - 36) இரவு 10½ மணி வரையில் விவாகம் சிறப்பாக நிறைவேறலாயிற்று. தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் திருவருள்பாலிப்பாராக,

### மதுரையிற் சித்திரை விழா

மதுரை, மே 4—

மதுரையில் சித்திரை உற்சவம் சிறப்பாக நடந்துவருகிறது. ஞாயிற்றுக்கிழமை திருக்கலியாணமும், திங்கட்கிழமை ரதோற்சவமும் நன்கு நடைபெற்றன. இவ்வருடத்திய உற்சவம் வெகு சிறப்பாகக் காலாகாலத்தில் நடந்ததென்பதை எவரும் மறுக்கமுடியாது. நேற்று அம்மன் தேரும், ஸ்வாமி தேரும் காலை 10-30 மணி வரையில் திரும்பவும் நிலைக்கு வந்துவிட்டன. இவ்வளவு சீக்கிரமாக எந்த வருடமும் தேர் நிலைக்கு வந்ததே கிடையாது. சில வருடங்களில் தேர் நிலைக்கு வர இரண்டு மூன்று தினங்கள்கூடச் சென்றிருக்கிறது. இவ்வருடத்திய உற்சவம் இவ்வளவு சிறப்பாக நடந்ததற்குமுக்கிய காரணம் புதிய தர்மகர்த்தா ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடுகாருவின் தளரா ஊக்கமும், சிரத்தையுமே யெனலாம். உற்சவத்திற்கு வந்த பக்தகோடிகள் அவரையும் அவர் செய்திருந்த சிறந்த ஏற்பாடுகளையும் பெரிதும் பாராட்டுகின்றனர். ஆனால் ஸ்ரீபாதந் தாங்க அவர் புதிய ஆட்களைக் கொண்டுவராமல் பழைய கிராம வாசிகளையே நியமித்திருக்கலாமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

## அடைவுநகை விற்பனவுவிளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டத்தின் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுரோட்டு மூத்ததம்பி செல்லத்துரை என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டுத் தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1934-ம் ஆண்டு ஆகஸ்டுமீ

| நம். | உ. | ரு. | பெயர் ஊர் நகைவிபரம் |
|---|---|---|---|
| 8913 | 11 | 10 | இ செல்லையா ஆரியகுளம் ½ பவுண் 1 மோதிரம் 3 |
| 8964 | 17 | 75 | வ கணபதி புழுகுதகிதோட்டம அச்சக்காப்பு 2 |
| 8994 | 20 | 7 | கா வள்ளி அம்மைஆம்பத்திரியடி ½ பவுண் சட்டோலை |
| 9052 | 29 | 8 | மு சொக்கலிங்கம் ஆரியகுளம் ஒலை 2 |
| 1934ம் ஆண்டு செப்டெம்பர்மீ | | | |
| 9096 | 4 | 76 | க கனகசபை சீர்வேலி அச்சக்காப்பு 2 |
| 9109 | 7 | 15 | க செல்லன் ஆரியகுளம் காப்பு 2 |
| 9135 | 10 | 20 | மு பொன்று ஆரியகுளம் கவுகதோர் 1 |
| 9162 | 13 | 14 | சி துரையப்பா அரசியடி கடுக்கன் சோடி 2 |
| 9207 | 17 | 15 | ப. ஆறுமுகம் ஆரியகுளம் ஒலை, வாளி |
| 9224 | 21 | 6 | சி கந்தையா கச்சேரியடி கவுகதோர் 1 |
| 9272 | 27 | 30 | அ ஆறுமுகம் ஆரிய குளம் முத்து புரோச் |
| 9273 | 27 | 15 | அ ஆறுமுகம் ஆரியகுளம் மோதிரம் 1 |
| 1934-ம் ஆ அக்டோபர் மீ | | | |
| 9313 | 4 | 10 | மூ மாதன் சிறுப்பியடி ஒலை 2 |
| 9324 | 6 | 16 | பொ துரையப்பா சிறுப்பியடி ஒலை 2 குச்சு 2 |
| 9327 | 6 | 80 | வ முத்தர்தம்பி சேணியதெரு முறுச்சுக்குத்தி அட்டியல் பதக்கச் [சோடு |
| 9352 | 9 | 48 | ஆ ஆறுமுகம் ஆரியகுளம் அச்சு காப்பு 2 |
| 9379 | 14 | 10 | ஐ சபாபதி புழுகுதகித் தோட்டம் ஒலை 2 |
| 9393 | 15 | 10 | அ சாதசேகர நிரைவேலி வெ கடுக்கன் 2 |
| 9397 | 15 | 8 | க சின்னத்தம்பி சிறுப்பியடி ஒலை 2 |
| 1934-ம் ஆ நவம்பர்மீ | | | |
| 9677 | 25 | 105 | அ ஆறுமுகம் ஆரியகுளம் தாலிகொடி 1 |
| 1934ம் ஆண்டு டிசம்பர்மீ | | | |
| 9805 | 17 | 7 | த செல்லையா சேணியதெரு மோதிர 1 |
| 9814 | 19 | 10 | செ முத்து ஆரியகுளம் சிறபதக்கம் |
| 9815 | ,, | 20 | க கணபதிப்பிள்ளை சேணியதெரு மோதிரம்2 |
| 1935ம் ஆண்டு ஜனவரிமீ | | | |
| 9932 | 6 | 45 | மு வேலுப்பிள்ளை கைதடி சங்கிலி, ½ பவுண் |
| 9971 | 12 | 10 | தி அப்புத்துரை நல்லூர் தாலி 1 |
| 10009 | 18 | 15 | ம யோசேப்பு ஆரியகுளம் சிறுகாப்பு 2 |
| 10015 | 19 | 9 | செ ஐயாத்துரை ஆனைப்பந்தி ஒலை 2 |
| 1935ம் ஆண்டு பெப்ரவரிமீ | | | |
| 10160 | 10 | 15 | ப சண்முகம் ஆரியகுளம் ஒலை 2 |
| 10192 | 13 | 12 | சி கல்லத்தட சாவற்குளி ஒலை 2 |
| 10202 | 14 | 8 | வே வைத்தியலிங்கம் செட்டித்தெரு மோதிரம் 2 |
| 10223 | 18 | 62 | வே கனகரத்தினம் ஆரியகுளம் மு அட்டியல 1 |
| 10270 | 25 | 6 | கா பெருமாள் பெருமாள்கோவிலடி கல்மோதிரம் 1 |
| 1935-ம் ஆ மார்ச மீ | | | |
| 10285 | 1 | 15 | மு மயில்வாகனம் ஆனைப்பந்தி மோதிரம் 1 |
| 10307 | 4 | 75 | K சுந்தரமூர்த்தி சென்னப்பழை மோதிரம் 3 சங் 1 |
| 10320 | 6 | 8 | சி கந்தையா சாவற்குளி ஒலை 2 |
| 10329 | 9 | 13 | சி சுப்பிரமணியம் ஆரியகுளம் கல்மோதிரம் 1 |
| 10379 | 16 | 12 | வி சிவசங்கரன ஆனைப்பந்தி கல்மோதிரம் 1 |
| 10407 | 21 | 87 | வ சின்னத்துரை ஆரியகுளம் சங்கிலி 1 |
| 10408 | 21 | 10 | மு பொன்னம்பலம் உரும்பராய் பதக்கம் 1 |
| 10453 | 21 | 100 | த இராசரெத்தினம் கச்சேரியடி சங்க |
| 10459 | 30 | 8 | வி சோமசுந்தரம் பெருமாள்கோவிலடி ஒலை 2 |
| 10466 | 30 | 75 | வே கனகலிங்கம் ஆரியகுளம் சங்கிலி அட்டியல் பதக்கம் |

விற்பனவு தாதுவரு வைகாசிமீ 11-ந் தேதி (24-5-36) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் ஏடுபட்ட நகை பிறகேலாக மிகுதி மேற்படியார் வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வெந்தின் மேன்தர்

(Mis. 28, 11 & 14-5-36.)


சகாய விலை

## சிறந்த தேக்கமரங்கள்!

இந்த மேமாசம் 4-ம் தேதிதொடக்கம்
31-ம் தேதி முடிய குறைந்தவிலை.

பெருந்தொகையான தேக்கமரங்களை நாங்கள் விரைவில் இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால், இப்பொழுது இங்குள்ள சிறந்த சங்கூன்சியம் தேக்கமரங்களையெல்லாம், மேலே காட்டப்பட்ட தேதிகளுக்கிடையில் குறைந்தவிலைக்கு விற்பதற்காகிய ஒழுங்குகள் செய்துவிட்டோம்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

S. வீரகத்திப்பிள்ளை & ஸன்ஸ்
தேக்கமர ஓட்டு வியாபாரிகள்.

(Mi. 25 7-5 to 31-5-36.)

## N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்னிஷ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street, Colombo

Telephone No. 30.

(Y. 56. 8-2—7-2-37) வி


"எல்லோரும் இன்புற்றிருக்க நிணைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"


## இந்தியன் வங்கி
லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907] [வரையறுக்கப்பட்டது.

தலைமை ஆபீஸ்
சென்னை (மெட்ராஸ்)

யாழ்ப்பாணக் கிளைஆபீஸ்
(பெரிய கடை)

பொன் நகை, தான்யவகை இவைகளின் ஈட்டில் சகாயமான வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும். எல்லாவகையான பணக் கொடுக்கல் வாங்கல் விஷயங்களும் இங்கே செய்து கொள்ளலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை யாழ்ப்பாணம் மானேஜரிடம் அறிந்து கொள்ளலாம்.

Q 290. 9-3 to 8-6-36 வி


படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.


## சிவன் வேப்புத் தைலம்.

செம்மேகம், கருமேகப் பதக்கன், குஷ்டம், குறைநோய், அரிப்பு, தடிப்பு, சிரங்கு, சரப்மான் புண்களும்; விஷ கடிகள் மோசனுதல், கக்கூன்பதக்கன், சொறி சிரங்குதன்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய குலை ரோகங்கள்; அண்டவாதம் கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம், விக்கப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பதது, ரணங்களுக்கு இதை மேலுக்கும் பூசலாம்.

12நாள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.

இராஜனக் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதுவரை ஆயிரக் கணக்கில் குணமாகிவிட்டன.

### தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, சுவாசகாசம், சயக்கட்டு, கோழை, சுரம், உடம்பு அனலாயிருத்தல், ஆகிய கோளாறுகளையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், சிரம் கிறுதல், மூக்கடைப்பு, வாயில் நீருலல், இளைப்புத தோன்றல், மிமந்தா, [illegible] பீனிசக் கோளாறுகளையும் கண்டிப்பாய்க் குணம்செய்கிறது.

### இருமல், இளைப்பு சுகம்.

என்னைப் பத்துவருஷமாய்த் துன்பப்படுத்திய இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், தர்காறல், காள்தகரு இருமல் எலலாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.

(Sd.) அ. செ. செய்யது இப்ராஹிம், திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அனுபானம், தாளிசபத்திரி சூரணம் உட்பட
20 நாள் மருந்து ரூபா 12-50.

குறிப்பு:— வெளிநாட்டார் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.
(Q 19. 27-4 to 26-7-36) வி (PALNI S. 1.)

# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

**இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.**

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா **2-50.**
தபாற்கூலி **45** சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஏக்ஷணத்தில் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், கேசமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் எனப்படுவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் செட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் வீணைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

**இந்த நேத்திரானந்த தைலமே.**

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்ந்து தெரிகிற ஒவ்வொரு சிறபின்னைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332. 20-3-36 to 19-9-36)

---

## கொய்லன் வங்கி (லிமிற்றெட்)

**(1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)**

## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறேம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் விஞ்ஞாபித்துக்கொள்ளலாம்.

**V. C. ஓமன் B. A.**
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23 5 to. 22-5-36

---

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரையுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**
ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா
25ம்ஆதாயமும்பெறலாம்
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை ...த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

Y. 189. 1 11-35 to 31-10 36.)

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக ரோகிகளுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் ரோகிகள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம, வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதக்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம், சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
**க. ஆறுமுகம்பிள்ளை,**
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
**காத்தான்குடி போஸ்டு,**
மட்டக்களப்பு.

Y55 1-1-34 to 31-12-36) சிலோன்.

---

வண்ணைநகர்

தையல்நாயகி

**கலிவெண்பா**

**திருவூஞ்சல்**

முத்துக்குமாரசுவாமி

**திருவூஞ்சல்,**

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஒரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5.

மானேஜர்,
சைவப்பிரகாசயந்திரசாலை.
வண்ணார்பண்ணை.

---

## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை

---

## "இரதிமன்மத" சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரிய அழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ வேறு.

**N. B.** முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—
மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், **Quilon S. India.**

H 208, 1-12-35 to 31-5 36

---

## விட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின்
முதன்மையானதும் சிறந்ததுமான
திவ்விய ஔஷதம்.
மிருகக் கொழுப்பு
கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.

Y 53 1-1—31-12-36)

---

**"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்."**

---

## பத்திரக் கிரயம்.

( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் ரூ. ச. | ஆங்கிலம் ரூ. ச. | இருபிரதிகளும் ரூ. ச. |
|---|---|---|---|
| (தபாற்சக எல்லைக்குட்பட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-
ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.

---

**பொறுத்த லிறப்பினை யென்று மதனை**
**மறத்த லதனினு நன்று**

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா தயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 14th May 1936,